بسم الله الرحمن الرحیم نحمده ونصلّی علی رسوله الکریم وعلی عبده المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 6

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 32

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

02 முஹர்ரம் 1443 ஹிஜ்ரி கமரி 12 ஸஹுஃர் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 12 ஆகஸ்ட் 2021

## அல்லாஹ்வின் கட்டளை

إِنَّ الَّذِينَ آمَنُوا وَالَّذِينَ هَادُوا وَالصَّابِئُونَ وَالنَّصَارَىٰ مَنْ آمَنَ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ وَعَمِلَ صَالِحًا فَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ○

நம்பிக்கை கொண்டவர்கள், யூதர்கள், ஸாபிகள், கிறித்தவர்கள் ஆகியவர்களுள் அல்லாஹ்விடத்தும் இறுதிநாளிடத்தும் உண்மையாகவே நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்கின்றவர்களுக்கு (வருங்காலத்தைப் பற்றிய) எந்தப் பயமும் ஏற்படாது. அவர்கள் (சென்ற காலத்தைப் பற்றி) கவலையடையவு மாட்டார்கள். (5:70)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவர்களையும், இறை நேசர்களையும் எதிர்ப்பதும் அவர்களுக்கு துன்பம் கொடுப்பதும் ஒருபோதும் நல்ல கனிகளை தர முடியாது. நான் தொல்லைகள் கொடுத்து துன்பப்படுத்தி நிம்மதியை பெற்று விடுவேன் என்று எவர் கருதுகிறாரோ அவர் பெரும் தவறிழைக்கின்றார். மேலும் அவரது நஃப்ஸ் அவரை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

ஒரு நபர் ஒருவர் மீது அன்பு கொள்கின்றார் என்றால் அதுவும் தனது பிள்ளைகளை நேசிப்பதைப் போன்று அன்பு கொள்கின்றார் என்றால் அவரிடம் வேறொரு நபர் வந்து இவர் (நேசத்திற்குரியவர்) மரணித்து விடட்டும் என்று கூறினால் அல்லது இதுபோன்று வேறு ஏதாவது மனதை வேதனைப்படுத்தும் விஷயங்களை பேசுகின்றார் என்றால் மேலும் துன்பம் கொடுக்கின்றார் என்றால் அந்த நபரிடம் அவர் எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடியும்? தனது பிள்ளைகளுக்கு எதிராக தீய துஆ செய்கின்ற அந்த நபரிடம் அல்லது வேதனைக்குரிய கூற்றுகளை பேசிக் கொண்டிருக்கின்ற அதுபோன்ற நபரிடம் அந்தத் தந்தை எப்படி அன்பு கொள்வார்? இதேபோன்று இறைநேசர்களும், அத்ஃபாலுல்லாஹ் (இறைவனின் குழந்தைகள்) என்ற வடிவில் இருக்கின்றனர். ஏனென்றால் அவர்கள் பௌதீக பருவம் எனும் ஆடையை மாற்றிக் கொண்டார்கள். மேலும் அல்லாஹ்வின் கருணை மடியில் வளர்ந்து வருகின்றனர். இறைவன் அவர்களின் நண்பனாகவும், போதுமானவனாகவும் அவர்களுக்காக ரோஷம் கொண்டவனாகவும் இருக்கின்றான். ஒருவர் எவ்வளவு தான் தொழக்கூடியவராகவும், நோன்பு வைப்பவராகவும் இருந்தாலும் சரியே. அவர் அவரை (இறைநேசரை) எதிர்க்கின்றார்; மேலும் அவருக்கு துன்பம் கொடுப்பதில் மும்முரமாக இருக்கின்றார் என்றால் அல்லாஹ்வின் தன்மானம் பொங்கி எழுந்து விடும். மேலும் அவரை எதிர்க்கின்ற நபர்களின் மீது இறைவனின் கோபம் இறங்கி விடும். ஏனென்றால் அவர்கள் இறைவனின் ஒரு நேசத்திற்குரிய நபருக்கு துன்பம் கொடுக்க விரும்பினர். அந்த நேரத்தில் அவர்களின் (எதிரிகளின்) தொழுகையும் பயன்படாது. நோன்பும் பயன்படாது. ஏனென்றால் நோன்பு மற்றும் தொழுகையின் மூலமாக எந்த இறைவனை மகிழ்ச்சியூட்ட விரும்பினாரோ அவனை மற்றொரு செயலால் கோபப்படுத்தி விட்டார். பின்னர் இறைவனின் கோபம் அகன்று விடாத வரை அந்த திருப்தியின் அந்தஸ்து அவர்களுக்கு எப்படி கிடைக்க முடியும்? அந்த அறிவிலிகள் கோபத்தின் வழிகளை, காரணிகளை அறியாதவர்களாக இருக்கின்றார்கள். இன்னும் கூறப்போனால் அவர்களுக்கு தமது தொழுகை மற்றும் நோன்புகள் மீது ஒரு வகையான ஆணவமும், அகந்தையும் உள்ளது. விளைவு என்னவாகின்றது என்றால் இறைவனின் கோபம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அவர்கள் இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதற்கு பகரமாக நாளுக்கு

*(தொடர்ச்சி 12 வது பக்கம்...)*

## நபி இறைவனின் அருளால் பாவமற்றவராக இருக்கின்றார். அவ்வாறிருக்க அவர் اِغْفِرْلِیْ என்று கூறுவதன் பொருள் என்ன? நம்பிக்கையாளரின் பல்வேறு படித்தரங்களின் அடிப்படையில் اِغْفِرْلِیْ என்பதன் பல்வேறு பொருள்

رَبَّنَا اغْفِرْلِیْ وَلِوَالِدَیَّ وَلِلْمُؤْمِنِیْنَ یَوْمَ یَقُوْمُ الْحِسَابُ (14:42)

இந்த வசனத்திற்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இவ்வாறு விளக்கம் வழங்கியுள்ளார்கள்:

நபி இறைவனின் அருளால் பாவமற்றவராக இருக்கின்றார். அவ்வாறிருக்க அவர் اِغْفِرْلِیْ என்று கூறுவதன் பொருள் என்ன? உண்மையில் இறைஞானம் பெறாத மனிதர்களின் பார்வை எல்லைக்குட்பட்டதாக இருக்கின்றது. அவரது பார்வை மனிதன் வரையே சென்றடைகின்றது. மனிதனிடத்திலேயே ஆறுதல் அடைந்து விடுகின்றது. ஆனால் இறைஞானம் பெற்றவரின் பார்வை மேலே செல்கின்றது. மேலும் அது உயர்ந்து கொண்டே செல்கின்றது. மேலும் அல்லாஹ்வுக்கு எதிரில் அடியாருக்கு என்ன தகுதி உள்ளது என்பதை அவர் புரிந்து கொள்கின்றார்.

சூரியனுக்கு முன்னால் ஒரு துகளுக்கு என்ன அந்தஸ்து உள்ளது? ஏனென்றால் இறுதியில் மனிதன் அவனது படைப்பு தானே! அவனது வாழ்க்கை கூட அல்லாஹ்வால் அருளப்பட்டதாகும். அவன் புறமிருந்தே நேர்வழியும் வருகின்றது. எனவே நபி இறைஞானம் பெற்றவராக இருக்கின்றார். அவர் தனது இருப்பை பார்க்கின்றார். நான் என்ன செய்கின்றேனோ அதனை நான் செய்யவில்லை. மாறாக, இறைவனே செய்து கொண்டிருக்கின்றான் என்பதை அவர் அறிகின்றார்.

எனவே அவர் இவ்வாறு துஆ செய்கின்றார். அல்லாஹ்வே! எனது இருப்பை நீ அதிக அதிகமாக மறைத்து விடுவாயாக. மேலும் உனது இருப்பை அதிக அதிகமாக வெளிப்படுத்துவாயாக. ஒரு வகையில் اِغْفِرْلِیْ என்பதற்கு இந்நிலையில் இந்தப் பொருள் அமைகின்றது. அதாவது இறைவா! எனது அன்பின் ஊடகம் கொண்டு நான் கேட்கின்றேன். உனது திரையை நீ என்மீது போடுவாயாக. அதாவது எனது இருப்பை அழித்து உனது இருப்பு என் மூலமாக வெளிப்படட்டும். அடியார் மூலமாக அல்லாஹ்வின் இருப்பு எந்த அளவிற்கு வெளிப்படுமோ அதே அளவிற்கு அவர் தனது நல்ல நோக்கங்களில் வெற்றி பெறுவார் என்பது வெளிப்படையான விஷயமாகும். ஆயினும் மற்றவர்களுக்கு இந்தச் சொல் வரும்போது அந்த நேரம் அவர்களின் படித்தரத்திற்கேற்ப இந்த சொல்லிற்கு பொருள் தரப்படும்.

*(தொடர்ச்சி 12 வது பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நீதிமன்றத்தில் சமத்துவம் மற்றும் நீதியை பேணுமாறு அறிவுரை வழங்கினார்கள்.**

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷரீஅத் சட்டங்களை அறிந்து கொள்வதற்காக இஃப்தா துறையை நிறுவினார்கள். சில சஹாபிகளை நியமனம் செய்து அவர்களை தவிர்த்து வேறெவரிடமும் ஃபத்வா பெறக்கூடாது என்று கூறினார்கள்**

**எவர் اَلْقَوِیُّ الْاَمِیْنُ நபரைப் பார்க்க விரும்புகின்றாரோ அதாவது வலிமை வாய்ந்த மற்றும் நேர்மையான நபரை பார்க்க விரும்புகின்றாரோ அவர் இந்த நபரை (ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை) கண்டு கொள்ளட்டும்**

**மக்களே! பொது முஸ்லிம்களுக்கு எவ்வளவு உரிமை உள்ளதோ அதே அளவிற்கு உரிமை தான் உமரின் குடும்பத்தினருக்கும் உள்ளது – ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள்**

**ஆறு மர்ஹூம்களின் நற்குறிப்பும், ஜனாஸா காயிப் தொழுகையும்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 09 ஜுலை 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **வஃபா** மாதம் **09 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ بِالَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நற்குறிப்பு நடைபெற்று வருகின்றது. நீதித்துறை உருவாக்கப்பட்டது தொடர்பாக அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முறையாக நீதித்துறையை துவக்கி வைத்தார்கள். எல்லா மாவட்டங்களிலும் முறையாக நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டு நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நீதிமன்றங்கள் தொடர்பான சட்ட விதிகளையும் இயற்றினார்கள்.

(ஷுப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 195 – 198 – 2004 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

நீதிபதிகள் தேர்ந்தெடுப்பில் ஃபிக்ஹா வல்லுநர்களே நீதிபதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆனாலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இத்துடன் திருப்தியடைந்து விடவில்லை. மாறாக அவர்களையும் பரிசோதித்து வந்தார்கள். நீதிபதிகளுக்கு பெரும் தொகையை ஊதியமாக நிர்ணயித்திருந்தார்கள். தவறான தீர்ப்பு எதுவும் செய்து விடக்கூடாது என்பதற்காக அவ்வாறு செய்திருந்தார்கள். தீர்ப்பின்போது எவரது தாக்கத்திற்கும் வந்துவிடாமல் இருப்பதற்காக செந்தவர்களையும், கண்ணியத்திற்குரிய நபர்களையும் நீதிபதியாக நியமித்து வந்தார்கள். நீதிமன்றங்களில் சமத்துவம் மற்றும் நீதியை கருத்தில் கொள்வதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிவுறுத்தி வந்தார்கள்.

ஒரு முறை ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி) அவர்களுடன் ஒரு வகையான சச்சரவு ஏற்பட்டது. ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸைது பின் சாபித் (ரலி) அவர்களின் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்கள். ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களையும், ஹஸ்ரத் உபை (ரலி) அவர்களையும் அழைத்தார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு மரியாதை செலுத்தினார்கள். அப்போது இது உங்களது முதலாவது அநீதியாகும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அவ்வாறு கூறிவிட்டு ஹஸ்ரத் உபை (ரலி) அவர்களுடன் அமர்ந்து கொண்டார்கள்.

(ஷுப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 199, 200 – 2004 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

அதாவது நாங்கள் இருவரும் இப்போது இருதரப்பினர் ஆவோம். இரு தரப்பையும் சமமாக பாருங்கள். இருவரையும் ஒன்றாக அமரச் செய்யுங்கள். எனக்கு மரியாதை செலுத்தாதீர்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஒரு முறை ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி) அவர்களுடன் ஒரு சண்டை ஏற்பட்டு விட்டது. நீதிபதிக்கு முன் விவகாரம் வந்தது. அவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அழைத்தார். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வந்தவுடன் (நீதிபதி) தனது இடத்திலிருந்து மரியாதை செலுத்தியவாறு அதாவது இவர் காலத்தின் கலீஃபா ஆவார் என்ற அடிப்படையில் தனது இடத்திலிருந்து மரியாதை நிமித்தமாக எழுந்து நின்றார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எதிர் தரப்பிற்கு அருகில் சென்று அமர்ந்து கொண்டார்கள். மேலும் இது நீங்கள் செய்த முதலாவது அநீதியாகும். தற்போது எனக்கும் எனது எதிர்தரப்பிற்கும் இடையில் எந்த வித்தியாசமும் இருக்கக்கூடாது என்று நீதிபதியிடம் கூறினார்கள்.

(அஹ்மதிய்யத் யானி ஹகீக்கி இஸ்லாம், அன்வாருல் உலூம் தொகுதி 8 பக்கம் 300)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஃபத்வா வழங்குகின்ற துறையையும் துவங்கி வைத்தார்கள். ஷரீஅத் சட்டங்களை அறிந்து கொள்வதற்காக இஃப்தா துறையை ஏற்படுத்தினார்கள். சில சஹாபிகளை நியமனம் செய்தார்கள். அவர்களைத் தவிர்த்து வேறு எவரிடமிருந்தும் மார்க்கத்தீர்ப்பு பெறப்படாது என்று அறிவித்தார்கள். அவ்வாறு ஃபத்வா வழங்கக்கூடியவர்களில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல் (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி), ஹஸ்ரத் அபி பின் கஅப் (ரலி), ஹஸ்ரத் ஸைத் பின் சாபித் (ரலி), ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூதர்தா (ரலி) ஆகியோரும் இருந்தனர். இந்த நபர்களைத் தவிர்த்து வேறு யாராவது மார்க்கத் தீர்ப்பு கொடுத்தால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதை தடை செய்து விடுவார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த முஃப்தி சாஹிபுகளையும் அவ்வப்போது ஆய்வு செய்து வந்தார்கள்.

(ஷுப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 202 – 2004 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இது குறித்து கூறுகின்றார்கள்:

ஃபத்வா தொடர்பாக ஒரு துறை உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் அன்னாரின் காலத்திற்குப் பிறகு கிலாஃபத் காலத்தில்

இந்த சட்டம் நடைமுறையில் இருந்தது. அதாவது ஷரீஅத் விவகாரங்களில் ஃபத்வா கொடுப்பதற்கு எல்லா நபருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எந்த அளவிற்கு எச்சரிக்கையாக இருந்து வந்தார்கள் என்றால் ஒரு சஹாபி இருந்தார். அவர் அநேகமாக அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) ஆவார். அன்னார் மார்க்க அறிவிலும் மிகவும் வல்லுநராக இருந்தார். மேலும் ஒரு கம்பீரமிக்க மனிதராக இருந்தார். அன்னார் ஒரு முறை ஒரு விவகாரத்தை மக்களுக்கு கூறினார்கள். அது குறித்த தகவல் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை சென்றடைந்தது. அந்த தகவல் கிடைத்தவுடன் அன்னார் உடனடியாக அவரிடம் இவ்வாறு விளக்கம் கேட்டார்கள். நீங்கள் அமீராக இருக்கின்றீர்களா? அல்லது அமீரால் நியமிக்கப்பட்டிருக்கின்றீர்களா? நீங்கள் எப்படி ஃபத்வா கொடுக்கின்றீர்கள்? என்று கேட்டார்கள்.

உண்மையில் ஒவ்வொரு நபருக்கும் ஃபத்வா வழங்குவதற்கு உரிமை இருக்குமென்றால் ஏராளமான பிரச்சனைகள் உருவாகி விடும். மேலும் பொது மக்களுக்கு ஏராளமான ஃபத்வாக்கள் சோதனைக்கு காரணியாகி விடும். ஏனென்றால் சில நேரத்தில் ஒரே விவகாரத்தில் இரண்டு வேறுபட்ட ஃபத்வாக்கள் இருக்கும். இரண்டும் சரியாகவே இருக்கும். அதாவது சூழ்நிலைக்கேற்ப ஃபத்வா வழங்கப்படுகின்றது. விவகாரத்தை ஆழமாக பார்த்தால் அதில் ஒரு சிக்கல் இருக்கும். அந்த நிலையில் ஒரு தீர்ப்பு இருக்கும். வேறொரு சூழலில் வேறொரு தீர்ப்பு இருக்கும். ஆனால் இரண்டும் எவ்வாறு சரியாக இருக்கும் என்பதை புரிவதில் பொது மக்களுக்கு கஷ்டம் ஏற்பட்டு விடும். எனவே அவர்கள் அதனால் சோதனையில் வீழ்ந்து விடுவார்கள்.

(கிதாப் ஜல்ஸா ஸாலானா 17 மார்ச் 1919, அன்வாருல் உலூம் தொகுதி 4 பக்கம் 404)

பின்னர் இதேபோன்றே காவல்துறையையும் அன்னார் உருவாக்கினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்காக أَحْدَاث அதாவது காவல்துறையை உருவாக்கினார்கள். இந்தத்துறைக்கு விசாரணை, அமைதி மற்றும் பாதுகாப்பு, கடைவீதிகளின் மேற்பார்வை போன்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. அதாவது மக்கள் சரியான விஷயங்களில் அமல் செய்கின்றார்களா? இல்லையா? யாருடைய உரிமையாவது பறிக்கப்படுகின்றதா? என்பதை பார்க்க வேண்டும். ஒவருடைய உரிமை பறிக்கப்படுகின்றதென்றால் அதைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். மேலும் நிர்வாக விவகாரங்களை மேற்கொள்ள வேண்டும். விவகாரம் நீதிபதியிடம் செல்லாத வரை அதை நிர்வகிக்க வேண்டும். அமைதி, பாதுகாப்பை நிலைநாட்டுதல், கடைவீதிகளின் மேற்பார்வை போன்ற இந்த அனைத்து கண்காணிப்பு அதிகாரங்களும் காவல்துறையிடம் இருந்தன.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முறையாக சிறைச்சாலைகளையும் உருவாக்கி இருந்தார்கள். அதற்கு முன்பு வரை சிறைச்சாலையின் நடைமுறை இருந்திருக்கவில்லை. குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனைகளும் வழங்கப்பட்டு வந்தன.

பின்னர் இதேபோன்று பைத்துல் மால் அமைப்பையும் நிறுவினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு முன்பு வரை வந்த செல்வங்கள் எல்லாம் உடனடியாக பங்கிடப்பட்டு வந்தன. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் ஒரு வீடு விலைக்கு வாங்கப்பட்டு பைத்துல் மால் அமைப்பிற்காக அர்ப்பணிக்கப்பட்டது. ஆனால் அது எப்போதும் அடைக்கப்பட்டிருந்தது. ஏனென்றால் என்ன செல்வம் வந்தாலும் உடனேயே பங்கிடப்பட்டு வந்தது. ஹிஜ்ரி 15 ஆம் ஆண்டில் பஹ்ரைனிலிருந்து ஐந்து லட்சம் ரொக்கம் வந்தவுடன் இந்தப் பணத்தை என்ன செய்ய வேண்டும்? என ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சஹாபிகளிடம் ஆலோசனை செய்தார்கள். சிரியா அரசர்களிடம் கருவூலத்துறைகள் நிறுவப்பட்டுள்ளன என்று ஒரு கருத்து கூறப்பட்டது.

எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்தக் கருத்தை விரும்பினார்கள். மேலும் மதீனாவில் பைத்துல் மால் அமைப்பிற்கான அடித்தளத்தை அமைத்தார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அர்கம் (ரலி) அவர்கள் கருவூல அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டார்கள். பின்னர் மதீனா மட்டுமல்லாமல் அனைத்து மாநிலங்களிலும் ஏனைய இடங்களிலும் பைத்துல் மால் அமைப்பு நிறுவப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கட்டடங்களை கட்டுகின்ற பணிகளில் சிக்கனத்தை கடைபிடித்து வந்தார்கள். ஆனால் பைத்துல் மால் அமைப்பிற்கு மிகவும் உறுதிவாய்ந்த அழகான கட்டிடங்களை கட்டி வந்தார்கள். பின்னர் அதில் காவலர்களையும் பாதுகாப்பு பணிக்காக நியமித்து வந்தார்கள்.

(ஷுப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 203 – 205 – 2004 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

அதன் பாதுகாப்பிற்கான முழுமையான ஏற்பாடு இருந்தது. பைத்துல் மால் செல்வங்களை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சுயமே பாதுகாத்து வந்தார்கள். வரலாற்றில் வருகிறது. ஒரு முறை ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்களின் விடுதலை செய்யப்பட்ட ஓர் அடிமை இவ்வாறு கூறுகின்றார். ஒரு நாள் மிகவும் கடுமையான வெப்பம் இருந்தது. நான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் ஆலியா என்ற இடத்தில் அவர்களின் செல்வங்களுடனும், விலங்குகளுடனும் இருந்தேன். மதீனாவிலிருந்து நஜதை நோக்கி 4 லிருந்து 8 மைலுக்குள் அமைந்திருந்த அந்த பள்ளத்தாக்கை ஆலியா என்று கூறுவார்கள். அன்னார் ஒரு மனிதரைப் பார்த்தார்கள். அவர் இரண்டு இளம் ஒட்டகங்களை ஓட்டிக் கொண்டு சென்று கொண்டிருந்தார். அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஒரு மனிதர் வந்து கொண்டிருப்பதை கண்டார்கள். அந்த மனிதருக்கு முன்னால் ஒட்டகங்கள் சென்று கொண்டிருந்தன. நிலம் மிகவும் வெப்பமாக இருந்தது. இந்த நபருக்கு என்னவாகி விட்டது? இவர் மதீனாவிலிருந்து சற்று வெப்பம் தணிந்த பிறகு வெளியேறி இருந்தால் அவருக்கு நன்றாக இருந்திருக்குமே? என்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அந்த நபர் அருகில் வந்தபோது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இந்த நபர் யார்? என்று பார்க்கும்படி தன்னிடம் கூறியதாக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஊழியர் கூறுகின்றார். அப்போது போர்வையால் போர்த்தியிருந்த ஒரு நபர் இரண்டு இளம் ஒட்டகங்களை ஓட்டிக் கொண்டு செல்கின்றார் என்று கூறினார். பின்னர் அந்த நபர் மேலும் நெருங்கி வந்தபோது அந்த நபர் யார் என்று பாருங்கள் என்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள். நான் பார்த்தபோது அவர் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) ஆக இருந்தார்கள் என்று நான் கூறினேன். இவர் அமீருல் மூமினீன் அல்லவா! என்று நான் கூறினேன். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் எழுந்து நின்று வாசலுக்கு வெளியே தலையை நீட்டினார்கள். ஆனால் வெப்ப காற்று வீசியபோது அன்னார் தலையை உள்ளே எடுத்துக் கொண்டார்கள்.

பின்னர் மீண்டும் உடனடியாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை நோக்கி முகம் திருப்பி, இந்த நேரத்தில் தங்களை எந்த நிர்பந்தம் வீட்டிலிருந்து வெளியேற்றியது? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: சதகாவிற்குரிய ஒட்டகங்களில் இந்த இரண்டு ஒட்டகங்கள் பின்தங்கி விட்டன. இதைத் தவிர்த்து எஞ்சிய அனைத்து ஒட்டகங்களும் மேய்த்து வரப்பட்டு விட்டன. எனவே இதனை அதனுடைய தங்குமிடத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்று நான் விரும்பினேன். இவை இரண்டும் தொலைந்து விடும் என்ற அச்சம் எனக்கு இருந்தது. அந்நிலையில் அல்லாஹ் என்னிடம் இது பற்றி கேள்வி கேட்பான்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அமீருல் மூமினீன் அவர்களே! தாங்கள் நிழலில் வந்து விடுங்கள். மேலும் தண்ணீர் அருந்துங்கள். நாங்கள் உங்களுக்கு போதுமானவர்களாக இருக்கின்றோம். நாங்கள் தொண்டாற்றுகின்றோம். நாங்கள் அதனை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்கின்றோம். நீங்கள் உங்களது இருப்பிடத்திற்கு திரும்புங்கள் என்றும் கூறினார்கள். ஆனால் நீங்கள் சென்று நிழலில் அமருங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறி விட்டார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமை கூறுகின்றார்: உங்களுக்கு தேவையான விஷயம் எங்களிடம்

உள்ளது என்று நான் கூறினேன். அப்போது நீங்கள் உங்களது இருப்பிடத்திற்கு திரும்பிச் செல்லுங்கள் என்று ஹஸ்ரத் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறி விட்டார்கள்.

பின்னர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

எவர் اَلْقَوِيُّ الْاَمِيْنُ நபரைப் பார்க்க விரும்புகின்றாரோ அதாவது வலிமை வாய்ந்த மற்றும் நேர்மையான நபரை பார்க்க விரும்புகின்றாரோ அவர் இந்த நபரை கண்டு கொள்ளட்டும்.

மற்றொரு அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் உமர் பின் நாஃபி அவர்கள் அபூபக்ர் ஈஸா அவர்களிடமிருந்து அறிவிப்பு செய்து கூறுகின்றார்கள். அவர் கூறி வந்தார். நான் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் (ரலி) ஆகியோருடன் சதகாவின் நேரத்தில் வந்தேன். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் நிழலில் அமர்ந்து கொண்டார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அன்னாருடன் நின்று கொண்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறிய விஷயத்தை கூறிக்கொண்டு சென்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கடும் வெப்பத்திற்குரிய நாளாக இருந்தபோதிலும் வெயிலில் நின்று கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் இரண்டு கருப்பு நிற போர்வை இருந்தது. ஒன்றை கீழாடையாக அணிந்திருந்தார்கள். ஒன்றை தலையில் கட்டி இருந்தார்கள். மேலும் சதகாவிற்குரிய ஒட்டகங்களை ஆய்வு செய்து வந்தார்கள். ஒட்டகத்தின் உடலில் அதனுடைய வயதை எழுதி வந்தார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம், அல்லாஹ்வின் வேதத்தில் உள்ள ஹஸ்ரத் ஷுஹைப் (ரலி) அவர்களின் மகளுடைய اِنَّ خَيْرَ مَنِ اسْتَاْجَرْتَ الْقَوِيُّ الْاَمِيْنُ என்ற இந்தக் கூற்றை நீங்கள் கேட்டுள்ளீர்களா? என்று கேட்டார்கள். நீங்கள் வேலைக்காக யாரை வைத்தாலும் வலிமை வாய்ந்த மற்றும் நேர்மையான நபரே சிறந்த ஊழியராக நிரூபணமாவார். பின்னர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை நோக்கி சைகை செய்தவாறு இவரே اَلْقَوِيُّ الْاَمِيْنُ ஆவார் என்று கூறினார்கள்.

(அஸதுல் பாகா தொகுதி 3 பக்கம் 667 உமர் பின் கத்தாப் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இது குறித்த சம்பவத்தை பற்றி கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஒரு சம்பவம் உள்ளது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் ஒரு முறை ருக்பா என்ற இடத்தில் அமர்ந்திருந்தேன். எந்த அளவுக்கு கடுமையான வெப்பம் இருந்ததென்றால் கதவை திறப்பதற்கும் தைரியம் வரவில்லை. இதற்கிடையில் எனது அடிமை என்னிடம் இவ்வாறு கூறினார்: பாருங்கள்! இந்த கடுமையான வெப்பத்தில் வெளியில் ஒரு நபர் திரிந்து கொண்டிருக்கின்றார். நான் திரையை அகற்றி பார்த்தபோது எனக்கு ஒரு நபர் தென்பட்டார். அவரது முகம் கடுமையான வெப்பத்தின் காரணமாக கருகி இருந்தது. அவர் யாராவது ஒரு பயணியாக இருப்பார் என்று நான் எனது வேலைக்காரரிடம் கூறினேன். ஆனால் சிறிது நேரமே கழிந்தபோது அந்த நபர் எனது குவிமாடத்திற்கு அருகில் வந்தடைந்தார். அவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களாக இருந்தார்கள் என்பதை நான் கண்டேன். அன்னாரை கண்டதும் நான் பதற்றமடைந்து வீட்டை விட்டு வெளியே வந்தேன். இந்த நேரத்தில் கடுமை வெப்பத்தில் தாங்கள் எங்கே வந்தீர்கள்? என்று கேட்டேன். அதற்கு பைத்துல் மாலின் ஒரு ஒட்டகம் தொலைந்து விட்டது. அதனைத் தேடி நான் வெளியில் சுற்றித் திரிந்து கொண்டிருக்கின்றேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 8 பக்கம் 314, 315)

ஒட்டகம் தொலைந்து போன ஒரு சம்பவமும் வருகின்றது. முன்னரும் ஒரு முறை எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு முறை பைத்துல் மால் செல்வத்தை பங்கிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது அன்னாருடைய ஒரு மகள் வந்து விட்டார். அவர் அந்த செல்வத்திலிருந்து ஒரு தர்ஹமை எடுத்துக் கொண்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதனை வாங்குவதற்காக எழுந்தார்கள். அன்னாருடைய தோளிலிருந்து போர்வை கீழே விழுந்து விட்டது. அந்த சிறுமி தனது குடும்பத்தினரிடம் அழுது கொண்டே ஓடி விட்டார். மேலும் அவர் அந்த திர்ஹமை தனது வாயில் போட்டுக் கொண்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த சிறுமியின் வாயில் விரலை விட்டு அந்த திர்ஹமை வெளியில் எடுத்தார்கள். பின்னர் அதனை செல்வத்துடன் சேர்த்து வைத்து விட்டார்கள். பின்னர் மக்களே! பொது முஸ்லிம்களுக்கு எவ்வளவு உரிமை உள்ளதோ அதே அளவிற்கு உரிமை தான் உமரின் குடும்பத்தினருக்கும் உள்ளது. அவர் நெருங்கிய உறவினராக இருந்தாலும் சரியே; அல்லது தூரத்து உறவாக இருந்தாலும் சரியே.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் அபூ மூஸா அவர்கள் ஒரு முறை பைத்துல் மாலை சுத்தம் செய்தார்கள். அப்போது அவருக்கு ஒரு திர்ஹம் கிடைத்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஒரு சிறு பிள்ளை சென்று கொண்டிருந்தது. அன்னார் அதனை அவரிடம் கொடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த திர்ஹமை அந்தப் பிள்ளையின் கையில் பார்த்து விட்டார்கள். அப்போது அன்னார் அது குறித்து கேட்டார்கள். எனக்கு இதனை அபூ மூஸா கொடுத்தார் என்று அந்த சிறுமி கூறினார். இந்த திர்ஹம் பைத்துல் மாலிற்கு சொந்தமானது என்பதை அறிந்து கொண்ட பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

அபூ மூஸாவே! மதீனாவாசிகளில் உமர் குடும்பத்தினரை தவிர்த்து உமது பார்வையில் வேறு எந்த குடும்பமும் அதிக உரிமை படைத்ததாக இருக்கவில்லையா? முஹம்மதிய சமுதாயத்திலிருந்து எவரும் எஞ்சியிருக்கக்கூடாது என்று நீர் விரும்புகின்றீரா? அவர்கள் எம்மிடமிருந்து இந்த அநீதியை எதிர்பார்க்கின்றார்களா? என்று கூறி அன்னார் அந்த திர்ஹமை பைத்துல் மாலில் ஒப்படைத்து விட்டார்கள்.

(இஷ்தியாக் அஹ்மத் சாஹிப் அவர்கள் மொழியாக்கம் செய்த இஸாலத்துல் குலஃபா அன் கிலாஃபத்துல் குலஃபா என்ற நூல் தொகுதி 3 பக்கம் 286, கதீமி குதுப் கானா கராச்சியில் அச்சிடப்பட்டது)

பொது நலன் பணிகள் குறித்து இவ்வாறு வருகின்றது. அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பொது மக்களின் நன்மை மற்றும் மேம்பாட்டிற்காக ஏராளமான கீழ்க்கண்ட பணிகளை செய்து வந்தார்கள். விவசாயத்தில் முன்னேற்றம், பொது மக்களுக்கு குடி தண்ணீருக்கான ஏற்பாடு, அதற்காக கால்வாய்களை வெட்டச் செய்வது, (1) அபூ மூஸா கால்வாய்: கஜல்லா எனும் நதியிலிருந்து 9 மைல் நீளமான கால்வாய் உருவாக்கப்பட்டு பஸரா வரை கொண்டு வரப்பட்டது. (2) முஅக்கல் கால்வாய்: இந்த கால்வாயும் தஜல்லா நதியிலிருந்து தோண்டப்பட்டது. (3) அமீருல் மூமினீன் கால்வாய்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கட்டளைப்படி நைல் நதி செங்கடலுடன் இணைக்கப்பட்டது. 18 ஆம் ஹிஜ்ரியில் வறட்சி பரவியபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்களுக்கு உதவிக்காக கடிதம் எழுதினார்கள். தூரம் அதிகமாக இருந்ததால் உதவி வந்தடைவதில் தாமதம் ஏற்பட்டது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அம்ர் அவர்களை அழைத்து கூறினார்கள்:

நைல் நதியை கடலுடன் சேர்த்து விட்டால் அரபு நாட்டில் ஒருபோதும் வறட்சி ஏற்படாது என்று கூறினார்கள். அங்கு கவர்னராக இருந்த அம்ர் அவர்கள் திரும்பிச் சென்று கிஸ்தாதிலிருந்து செங்கடல் வரை கால்வாயை வெட்டினார்கள். அதன் மூலம் மதீனாவின் துறை முகம் வரை கப்பல் வந்தடைந்தது. இந்த கால்வாய் 29 மைல் நீளம் கொண்டதாக இருந்தது. மேலும் ஆறு மாதத்தில் இது தயார் செய்யப்பட்டது. ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் மத்திய தரைக் கடலையும், செங்கடலையும் இணைப்பதற்கு எண்ணம் கொண்டார்கள். ஃபர்மா என்ற இடத்திலிருந்து செங்கடலும், மத்திய தரைக்கடலும் 70 மைல் தொலைவில் இருந்தது. அங்கு கால்வாயை உருவாக்கி இரண்டையும் இணைக்க விரும்பினார்கள். ஃபர்மா என்பது எகிப்தின் சுற்று வட்டாரத்தில் அமைந்திருந்த ஒரு கடற்புற நகரமாகும். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி)

அவர்கள் யுனானிகளின் கரங்களால் ஹாஜிகள் கொள்ளையடிக்கப்படுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாக அதில் உடன்படவில்லை. ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்கு அனுமதி கிடைத்திருந்தால் பிற்காலத்தில் கட்டப்பட்ட சூயல் கால்வாயின் கண்டுபிடிப்பு அரபிகளின் பங்கில் வந்திருக்கும்.

பல்வேறு கட்டிடங்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பொது மக்களின் வசதிக்காக பல்வேறு கட்டிடங்களை கட்டினார்கள். அதில் பள்ளிவாசல்கள், நீதிமன்றங்கள், இராணுவ தளங்கள், முகாம்கள், தேசிய கட்டுமான பணிகளுக்கான பல்வேறு அலுவலகங்கள், சாலைகள், பாலங்கள், விருந்தினர் இல்லங்கள், சோதனைச் சாவடிகள் ஆகியவை அடங்கும். மதீனாவிலிருந்து மக்கா வரை ஒவ்வொரு இடத்திலும் நீரூற்றையும், தங்குமிடத்தையும் மேலும் சோதனைச் சாவடிகளையும் அன்னார் கட்டினார்கள்.

(ஷுப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 206–210 – 2004 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

அதாவது பாதுகாப்பிற்கான ஏற்பாடும் இருந்தது. மக்கள் தங்குவதற்காகவும், ஒய்வு எடுப்பதற்காகவும் ஹோட்டல் போன்றவற்றை கட்டினார்கள். மக்கள் தங்குவதற்கு ஏதுவாக அவ்வாறு செய்தார்கள். நகர்ப்புற குடியேற்றம் தொடர்பாக இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது கிலாஃபத் காலகட்டத்தில் பல்வேறு புதிய நகரங்களை உருவாக்கினார்கள். அன்னார் அதில் குடியமர்த்தியபோது பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் இதர நன்மைகளை கருத்தில் கொண்டிருந்தார்கள். இந்த நகரங்களின் வீட்டின் அமைப்பின் ஏற்பாடு என்பது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் போர் பற்றிய அகப்பார்வையையும், அரசியல் மற்றும் குடியமர்த்துதல் தொடர்பான அடிப்படை விதிமுறைகளில் அன்னாரின் ஆழமான பார்வைகளையும் சுட்டிக் காட்டுகின்றது. இந்த நகரங்கள் போர் நிலையிலும், அமைதியான நிலையிலும் இரண்டு நிலையிலும் பயனளிக்கக்கூடியதாக இருக்க ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முயற்சி செய்து வந்தார்கள்.

அதாவது அரபு நாட்டின் எல்லையான அஜமுடன் இணையும் பகுதியில் ஒரு நகரத்தை உருவாக்கி திடீர் தாக்குதலிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்று விரும்பினார்கள். இந்த நகரத்தின் வீடுகளின் அமைப்பு இவ்வாறு இருந்தது. அதாவது அது அரபிகளுக்கு ஏற்புடையதாக இருந்தது. இந்த நகரங்களின் ஒரு பக்கம் அரபு நாட்டின் எல்லைப்புறம் அமைந்திருந்தது. அது விலங்குகளை மேய்ப்பதற்குரிய பகுதியாக இருந்தது. மற்றொரு பக்கம் அஜமி பகுதியின் பசுமையான பகுதிகள் இருந்தன. அங்கு கனிகள், தானியங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் கிடைத்து வந்தன. அதாவது மற்றொரு பக்கம் விவசாயம் நடைபெற்று வந்தது. நகரங்களை குடியமர்த்துவதில் அதற்கிடையில் எந்தவொரு நதியும் அல்லது கடலும் அமைந்து விடக்கூடாது என்பது கருத்தில் கொள்ளப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பஸரா, கூஃபா, கஸ்தாத் போன்ற நகரங்களை உருவாக்கினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உறுதிவாய்ந்த மற்றும் சரியான அடித்தளங்களில் இந்த நகரங்களை குடியமர்த்தினார்கள். அவற்றின் சாலைகளையும், வழிப்பாதைகளையும் விரிவுபடுத்தி இருந்தார்கள். சாலைகள் மிகவும் சிறந்ததாகவும், பெரிய சாலைகளாகவும் இருந்தன. மிகவும் சிறந்த வழிமுறையில் வடிவமைக்கப்பட்டிருந்தன. இந்த அறிவில் அன்னார் வல்லுநராகவும், சிறப்புமிக்கவராகவும் இருந்தார்கள் என்பதை இந்த சிந்தனையின் வழிமுறை நிரூபணம் செய்கின்றது.

(சீரத் அமீருல் மூமினீன் உமர் பின் கத்தாப் பக்கம் 214–217, 221 – 2007 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)

இதேபோன்று இராணுவத்துறை உள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதனை ஏற்படுத்தினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முறையாக இராணுவத்திற்கு பயிற்சி வழங்கினார்கள். அமைப்பு ரீதியாக அதனை வடிவமைத்தார்கள். தகுதிக்கேற்ப இராணுவத்தின் பதிவேடுகளை உருவாக்கினார்கள். அவர்களின் ஊதியங்களை நிர்ணயம் செய்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இராணுவத்தை இரண்டு பிரிவுகளில் பங்கிட்டார்கள். ஒன்று, முறையாக போரில் பங்கு பெற்று வந்தது. மற்றொரு பிரிவு தன்னார்வத் தொண்டர்களாக தேவையின் நேரத்தின்போது அழைக்கப்பட்டு வந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இராணுவத்தின் தர்பிய்யத்தை மிகவும் கருத்தில் கொண்டிருந்தார்கள். வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளில் எந்த நபரும் விவசாயம் அல்லது வியாபாரத்தின் பணிகளை மேற்கொள்ளக்கூடாது என்று அன்னார் மிகவும் வலியுறுத்தி கட்டளைகளை பிறப்பித்திருந்தார்கள். வெற்றி கொள்ளப்பட்ட இடங்களுக்குச் சென்று எந்த நபரும் வியாபாரம் அல்லது விவசாயம் செய்யக்கூடாது. ஏனென்றால் அவர்கள் இராணுவ வீரர்களாக இருந்தனர். இந்தக் கட்டளை இராணுவத்தினர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதன் மூலம் அவர்களின் போர் வீர திறமைகளில் பாதிப்பு ஏற்படுவதற்கான அச்சம் இருந்தது.

இன்றைய நாட்களில் நாம் முஸ்லிம் நாடுகளில் பார்க்கின்றோம். இராணுவத்தினர் வியாபாரங்களில் மும்முரமாக இருக்கின்றனர். மாறாக, ஒரு நாட்டைக் குறித்து இவ்வாறு கூறப்படுகின்றது. முதலில் இராணுவத்தினர் தமது தொழில் சார்ந்த திறமைகளை மட்டுமே பார்த்து வந்தனர். ஆனால் தற்போது கமிஷன் கிடைத்ததும் அதாவது அதிகாரி இவ்வாறு பார்க்கின்றார். எங்கு எவர் புதிய கட்டிடத்தை கட்டுகின்றார். எந்த பாதுகாப்பு காலனி எங்கு கட்டப்படுகிறது? எங்கு எனக்கு பிளாட் கிடைக்கும்? மேலும் நான் அதில் எனது பிளாட்டை எப்படி பெற்றுக் கொள்வது? என்றெல்லாம் எண்ணத் தொடங்கி விட்டனர். எவ்வாறிருப்பினும் இதன் காரணமாகவே அவர்களின் போர் வீர திறமைகள் குறைந்து கொண்டே செல்கின்றன.

அடுத்து வருகின்றது. குளிர் மற்றும் வெப்பம் நிலவும் நாடுகளின் மீது போர் தொடுக்கும் நேரத்தில் வானிலை கருத்தில் கொள்ளப்பட்டு வந்தது. ஏனென்றால் இராணுவத்தினரின் உடல் நலத்திற்கு எந்த பாதிப்பும் வந்து விடக்கூடாது என்பது எண்ணமாக இருந்தது. இராணுவத்தினர்களுக்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகக் கடுமையாக இந்த வழிகாட்டல்களை வழங்கி இருந்தார்கள். அனைத்து இராணுவ வீரர்களும் நீச்சல், குதிரை சவாரி, அம்பு எய்தல், வெறும் காலுடன் நடப்பது ஆகியவற்றை கற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நான்கு மாதங்களுக்குப் பிறகும் போர் வீரர்கள் நாட்டுக்கு திரும்பி தனது குடும்பத்தினர்களை சந்திப்பதற்காக அவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட வேண்டும். குதிரையில் சவாரி செய்வதற்காக சேணத்தில் கால் வைத்து ஏறக்கூடாது. மாறாக, துள்ளிக் குதித்து சவாரி செய்ய வேண்டும் என்று கடின உழைப்பை கருத்தில் கொண்டு இராணுவத்தினருக்கு கட்டளை வழங்கப்பட்டது. மேலும் இலேசான ஆடைகளை அணியக்கூடாது. வெயிலிலிருந்து விலகி இருக்க வேண்டும். குளியலறையில் குளிக்கக்கூடாது. அங்கு அதிகமான ஒய்வை விரும்பும் பழக்கம் ஏற்பட்டு விடும் என்பதால் அது தடுக்கப்பட்டது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வசந்த காலத்தில் இராணுவத்தினரை பசுமையான பகுதிகளில் அனுப்பி வைத்து விடுவார்கள். இராணுவ முகாம்கள் மற்றும் சோதனைச் சாவடிகள் உருவாக்கும் நேரத்தில் சுற்றுப்புற சூழல் கருத்தில் கொள்ளப்பட்டது. பசுமையான பகுதிகளில் வீரர்கள் அனுப்பப்பட வேண்டும்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai (Sec.Taleem, Melapalayam)

என்பதும் அவசியமாக இருந்தது. ஏனென்றால் அங்கு புத்தம் புதிய சூழலில் அவர்களின் உடல்நலமும் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்யப்பட்டது. சுற்றுப்புறச் சூழல் கருத்தில் கொள்ளப்பட்டு வந்தது. அனைத்து மாவட்டங்களிலும் இராணுவ தளங்கள் அமைக்கப்பட்டன. இராணுவ தலைமைத்துவ இடங்கள் மதீனாவிலும், பஸ்ராவிலும், கூஃபாவிலும், மவ்சல், கஸ்தாத், டமாஸ்கஸ், ஹஸ்ம், உர்தன், பாலஸ்தீன் ஆகிய இடங்களில் உருவாக்கப்பட்டன. அங்கு எப்போதும் இராணுவம் இருந்து வந்தது. ஒவ்வொரு நான்கு மாதத்திற்குப் பிறகும் இராணுவ வீரர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டு வந்தது. இராணுவ தலைமையகத்தில் ஒரே நேரத்தில் 4000 குதிரைகள் இருந்து வந்தன. அவை பராமரிக்கப்பட்டும் வந்தன. குதிரைகளின் தொடைகளில் ஜய்ஷ் ஃபீ சபீலில்லாஹ் அதாவது அல்லாஹ்வின் வழியில் படை என்று எழுதப்பட்டிருந்தது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் இஸ்லாமிய இராணுவம் போர் தளவாடங்களில் முன்னேற்றம் கண்டது. புதிய தளவாடங்கள் முறைப்படுத்தப்பட்டன. அதில் கோட்டைகளை தகர்க்கும் ஆயுதம் மற்றும் தபாப போன்ற ஆயுதங்களும் அடங்கும். தபாப என்பது எதிரிகளின் கோட்டைகளை உடைத்து தகர்க்கும் ஆயுதமாகும். அதற்குள் மனிதர்கள் அமர்ந்திருப்பார்கள். மேலும் கோட்டைகளின் சுவர்களில் ஓட்டைகளைப் போட்டு அதன் சுவர்கள் இடிக்கப்பட்டன.

(ஷுப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 216– 218 – 2004 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

இஸ்லாமிய அரசாங்கத்தின் கீழ் அன்னிய சமுதாயத்தின் மக்கள் மிக உயர்ந்த பதவிகளில் அமர்த்தப்பட்டார்கள். முஸ்லிம்களுக்கு மட்டுமே உயர்ந்த பொறுப்புகள் வழங்கப்பட்டு வந்தன என்பதல்ல. மாறாக, முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் அன்னிய சமுதாயத்தின் மக்களுக்கும் உயர் பொறுப்புகள் வழங்கப்பட்டு வந்தன.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலீஃபாக்களின் காலத்திலும் அமைதியான வழிமுறையில் முழு சமுதாயமும் வாழ்ந்து வரவில்லை. அவர்களின் உரிமைகள் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தன. எனவே அல்லாமா ஷிப்லி அவர்கள் இதைக் குறிப்பிட்டவாறு இவ்வாறு எழுதுகின்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் போர் தொடர்பான துறையை விரிவுபடுத்தினார்கள். அதற்காக எந்தவொரு சமுதாயத்தையும், எந்தவொரு நாட்டையும் குறிப்பிட்டு செயல்படுத்தவில்லை. எந்த அளவுக்கென்றால் மத, மார்க்க வேறுபாடுகளும் எந்த தடையும் கொண்டிருக்கவில்லை. இராணுவத்தில் தன்னார்வலர்களாக ஆயிரக்கணக்கான மஜூஷிகள் பங்கு பெற்றிருந்தனர். அதாவது இறைவனை மறுத்து, நெருப்பை வணங்கக்கூடியவர்கள் ஆவர். அவர்கள் சூரியனையும் வணங்கி வந்தார்கள். அத்தகைய நபர்களும் இராணுவத்தில் பங்கு பெற்றிருந்தார்கள். முஸ்லிம்களுக்கு சமமான அந்தஸ்து இராணுவத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. இராணுவ அமைப்பிலும் மஜூஷிகளைப் பற்றி தகவல் கிடைக்கின்றது.

இதேபோன்று எழுதுகின்றார்கள்: யுனானி மற்றும் ரோமானியர்களும் இராணுவத்தில் பங்கு பெற்றிருந்தார்கள். அந்த வகையில் எகிப்து வெற்றி கொள்ளப்பட்டபோது அவர்களில் 500 நபர்கள் போரில் பங்கு பெற்றிருந்தார்கள். மேலும் இன்று பாகிஸ்தானில் இவர்கள் இவ்வாறு கூறுகின்றனர். அதாவது அஹ்மதிகளை இராணுவத்திலிருந்து வெளியேற்றுங்கள். இது மிகவும் நுட்பமான, Sensitive பொறுப்புகளாகும் என்று அவர்கள் கூறுகின்றனர். உள்ளபடியே வரலாற்றை படித்தால் பாகிஸ்தான் சார்பாக அஹ்மதி (இராணுவ) அதிகாரிகளே அதிக தியாகங்களை செய்துள்ளனர். எவ்வாறிருப்பினும் இது அவர்களின் செயல்களாகும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைக் குறித்து இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் கஸ்தாத் நகரத்தில் குடியமர்த்தியபோது மிக தனித்துவம் வாய்ந்த தெருக்களும் உருவாக்கப்பட்டன. இந்தத் தொடரிலிருந்து யூதர்களும் கூட விலகி இருக்கவில்லை. எனவே எகிப்தின் வெற்றியில் அவர்களில் ஓராயிரம் நபர்கள் இஸ்லாமிய படையில் பங்கு பெற்றிருந்தார்கள்.

இதேபோன்று வரலாற்றிலிருந்து நிரூபணமாகின்றது. அதாவது அன்னிய சமுதாயங்களின் நபர்கள் போர் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு வந்தார்கள். எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ஈரானியர்களும், இராணுவ அதிகாரிகளாக நியமிக்கப்பட்டார்கள். அவர்களில் சிலருடைய பெயர்களும் வரலாற்றில் உள்ளன.

அல்லாமா ஷிப்லி அவர்கள் நான்கு அதிகாரிகளின் பெயர்களை குறித்து எழுதியுள்ளார்கள். ஸியா, குஸ்ரு, ஷஹரிய்யா, ஷேர்வியா, ஹரப்வியா, அவ்ஃரா வதீன். இந்த அதிகாரிகளின் ஊதியங்கள் அரசாங்க கருவூலங்களிலிருந்தே வழங்கப்பட்டு வந்தன. முறையாக Payroll-லில் அவர்களின் பெயர்களும் இருந்தன. நான்கு கலீஃபாக்களுக்குப் பிறகு ஹஸ்ரத் முஆவியா அவர்கள் தொடர்பாக வரலாற்றிலிருந்து நிரூபணமாகின்றது. அன்னாரின் காலத்தில் இப்னு ஆஸாத் என்ற பெயர் கொண்ட கிறிஸ்துவர் நிதியமைச்சராக இருந்துள்ளார்.

தஃப்ஸீரே கபீரில் நான் வாசித்துக் காட்டிய மேற்கோளில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அல்லாமா ஷிப்லி அவர்களின் ஆதாரத்தின் அடிப்படையில் அஃப்ருதீன் என்று எழுதியுள்ளார்கள். அதேபோன்று அல்ஃபாரூக் என்றும் எழுதப்பட்டுள்ளது. ஆனால் அரபி புத்தகத்தில் அவரது பெயர் அஃப்ருஸ்ஸீன் என்று எழுதப்பட்டுள்ளது. அதாவது د என்பதற்கு பகரமாக ز என்று வந்துள்ளது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 6 பக்கம் 534)

د என்பது சிறிய வித்தியாசமாகும். ஏனென்றால் மக்கள் இது பற்றி விவாதிக்கத் தொடங்கி விடுகின்றார்கள். எனவே நான் அதனை தெளிவுபடுத்தி விட்டேன்.

இதேபோன்று வியாபாரச் சந்தையின் கட்டுப்பாடு, விலைவாசி ஆகியவற்றின் அடிப்படையில் ஆகுமற்ற அளவிற்கு விலை வீழ்ச்சியை ஏற்படுத்துவதிலிருந்தும் இஸ்லாம் தடை செய்துள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதனை பேணச் செய்துள்ளார்கள். பொருட்களின் விலையை வீழ்ச்சியடைச் செய்வது தொடர்பாகவும், அதன் தடை தொடர்பாகவும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: விலையை ஆகுமற்ற முறையில் வீழ்ச்சியுறச் செய்வதிலிருந்து இஸ்லாம் தடுத்துள்ளது. விலையை வீழ்ச்சியுறச் செய்வதும் ஆகுமற்ற முறையில் செல்வத்தை சம்பாதிக்கின்ற வழிமுறையாகும். ஏனென்றால் பலம் வாய்ந்த வியாபாரிகள் பலவீனமான வியாபாரிகளை குறைந்த விலையில் பொருளை விற்கும்படி நிர்பந்தம் செய்கின்றனர். பின்னர் அவர்களை திவாலாக்குவதில் வெற்றி பெற்று விடுகின்றனர்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் காலத்தில் நடந்த ஒரு சம்பவம் உள்ளது. அன்னார் கடை வீதிகளில் ரோந்து வந்து கொண்டிருந்தார்கள். வெளியிலிருந்து வந்த ஒரு நபரை அன்னார் கண்டார்கள். அவர் உலர் திராட்சைகளை மிகவும் மலிவான விலையில் விற்பனை செய்து கொண்டிருந்தார். மதீனாவின் வியாபாரிகளால் அந்த விலைக்கு விற்க முடியாமல் இருந்தது. எனவே ஒன்று உங்களது பொருளை சந்தையிலிருந்து எடுத்துச் சென்று விடுங்கள். அல்லது எந்த அடிப்படையில் மதீனாவின் வியாபாரிகள் அதனை விற்கின்றார்களோ அதே விலையில் விற்பனை செய்யுங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவருக்கு கட்டளையிட்டார்கள்.

மதீனத்து வியாபாரிகள் அதிக விலைக்கு பொருளை விற்பனை செய்து கொண்டிருக்கவில்லை. இன்னும் கூறப்போனால், சரியான விலையிலேயே விற்பனை செய்து வந்தார்கள். எனவே அதே விலையில் பொருளை விற்கும்படி அன்னார் கூறினார்கள். அன்னாரிடம் இந்த கட்டளைக்கான காரணம் கேட்கப்பட்டபோது இவ்வாறு விற்பனை செய்வதற்கு அந்த நபருக்கு அனுமதி வழங்கப்பட்டால் சரியான விலையில் பொருளை விற்பனை செய்து கொண்டிருக்கின்ற மதீனாவின் வியாபாரிகளுக்கு நஷ்டம் ஏற்படும் என்று அன்னார் பதிலளித்தார்கள்.

சில சஹாபிகள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்த செயலுக்கு எதிராக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்தக் கூற்றை முன் வைத்தார்கள் என்பதில் எந்த ஐயமும் இல்லை. அதாவது சந்தையின் விலையை நிர்ணயம் செய்வதில் தலையிடக்கூடாது என்ற கூற்றை முன் வைத்தார்கள். ஆயினும் அவர்களின் இந்த ஆட்சேபனை சரியானதல்ல. ஏனென்றால் சந்தையின் விலையில் தலையிடுவதன் பொருள் என்னவென்றால், உற்பத்தி மற்றும் தேவையின் கோட்பாடுகளில் தலையிடுவதாகும். அதாவது Supply மற்றும் Demand ன் கொள்கைகளில் தலையிடுவதாகும். அதுபோன்று செய்வது நிச்சயமாக நஷ்டத்திற்குரியதாகும். அதிலிருந்து அரசாங்கம் விலகியிருக்க வேண்டும். சந்தை சுயமே உற்பத்தி மற்றும் தேவைக்கேற்ப மாற்றங்கள் செய்து கொள்கின்றன. இல்லையென்றால் பொது மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படாது. மேலும் வியாபாரிகள் அழிந்து விடுவார்கள்.

(இஸ்லாம் கா இக்திஸாதி நிஸாம், அன்வாருல் உலூம், தொகுதி 18 பக்கம் 53)

அதற்கு அனுமதி வழங்கக்கூடாது. ஆனால் விலைவாசியை கட்டுப்படுத்துவது ஆகுமானதாகும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதற்குரிய விளக்கத்தை வேறொரு இடத்தில் இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்: கொடுக்கல் வாங்கல் விவகாரங்களில் சீர்கேடு ஏற்படக்கூடாது என்பதும் குடிமக்களின் உரிமைகளில் அடங்கும். நாம் பார்க்கின்றோம். இஸ்லாம் இந்த உரிமையையும் புறக்கணிக்கவில்லை. எனவே இஸ்லாம் விலைவாசியை அதிகரிப்பதிலிருந்தும், அதிக விலைக்கு விற்பதிலிருந்தும் தடுத்துள்ளது. இதேபோன்று பிறருக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்கும், அவர்களை வியாபாரத்தில் தோல்வியுறச் செய்வதற்கும் விலைவாசியில் வீழ்ச்சியை ஏற்படுத்துவதிலிருந்தும் இஸ்லாம் தடை செய்துள்ளது. போட்டிக்கு குறைந்த விலையில் விற்பதையும் தடை செய்துள்ளது.

ஒரு முறை மதீனாவில் ஒரு வியாபாரி மற்ற கடைக்காரர்களால் விற்க முடியாத விலைக்கு திராட்சைப் பழத்தை விற்பனை செய்து கொண்டிருந்தார். சுருக்கமாக விலையை உயர்த்தி விற்பனை செய்வதிலிருந்தும் இஸ்லாம் தடுத்துள்ளது. விலை வீழ்ச்சியை ஏற்படுத்துவதிலிருந்தும் தடுத்துள்ளது. ஏனென்றால் இதன் மூலம் கடைக்காரர்களுக்கும் பாதிப்பு ஏற்படக்கூடாது. பொது மக்களுக்கும் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காக அவ்வாறு செய்துள்ளது.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 10 பக்கம் 307)

கல்வித்துறை தொடர்பாக வருகின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கல்வியில் மிகவும் முன்னேற்றத்தை ஏற்படுத்தினார்கள். எல்லா நாடுகளிலும் பள்ளிக்கூடங்களை நிறுவினார்கள். அதில் திருக்குர்ஆன், ஹதீஸ், ஃபிக்ஹா போன்ற கல்வி கற்பிக்கப்பட்டது. பெரும் சஹாபிகள் கல்வி மற்றும் தர்பிய்யத் பணியில் நியமிக்கப்பட்டார்கள். கற்பிக்கக்கூடியவர்களின் ஊதியங்களும் நிர்ணயிக்கப்பட்டிருந்தன.

(ஷுப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 233 – 2004 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

இதேபோன்று ஹிஜ்ரி காலண்டரின் ஆரம்பமும் எவ்வாறு நிகழ்ந்தது என்பது குறித்து அறிவிப்பில் வருகின்றது. ஒன்று சஹீஹ் புகாரியின் அறிவிப்பாகும். ஹஸ்ரத் சஹல் பின் சஅத் அவர்கள் அறிவிக்கின்றார்கள். சஹாபிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையின் ஆண்டிலிருந்தும் வரலாற்றை கணக்கிடவில்லை. அன்னாரின் மரணத்தின் ஆண்டிலிருந்தும் கணக்கிடவில்லை. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வந்ததிலிருந்தே அவர்கள் வரலாற்றை கணக்கிட்டுள்ளனர். அதாவது ஹிஜ்ரத்தின் நேரத்திலிருந்து கணக்கிட்டுள்ளனர்.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் மனாகிப் வல் அன்ஸார் ஹதீஸ் எண் 3934)

புகாரியின் விரிவுரையாளர் அல்லாமல் ஹிஜ்ர் அஸ்கலானி அவர்கள் கூறுகின்றார்கள்: இமாம் சஹீலியைப் பொறுத்தவரை சஹாபிகள் ஹிஜ்ரத்திலிருந்து வரலாற்றை துவக்க எண்ணம் கொண்டார்கள். அல்லாஹ்வினுடைய கூற்று அதாவது

لَمَسۡجِدٌ اُسِّسَ عَلَی التَّقۡوٰی مِنۡ اَوَّلِ یَوۡمٍ

என்பதிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. எனவே مِنۡ اَوَّلِ یَوۡمٍ என்பதன் பொருள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் அன்னாரின் நபித்தோழர்கள் மதீனாவில் நுழைந்த நாளாகும். வல்லாஹு அஃலம்.

ஹிஜ்ரி காலண்டரின் தேவைக்கான அவசியம் ஏன் உணரப்பட்டது? இது தொடர்பாக பல்வேறு அறிவிப்புகள் கிடைக்கின்றன. ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். தங்கள் புறமிருந்து எங்களுக்கு கடிதங்கள் கிடைக்கின்றன. அதில் தேதி போன்றவை பதியப்படுவதில்லை. அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களை ஆலோசனைக்காக ஒன்றுகூட்டினார்கள்.

அல்லாமா இப்னு ஹிஜ்ர் அவர்கள் கூறுகின்றார்கள்: புகாரி அவர்கள் கிதாபுல் அதப் என்ற நூலிலும், ஹாகிம் அவர்கள் மேமூன் பின் மஹ்ரான் அவர்களிடமிருந்தும் இந்த அறிவிப்பை செய்கின்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஒரு காசோலை வழங்கப்பட்டது. அதனுடைய கால அளவு ஷுஃபான் மாதமாக இருந்தது. எந்த ஷுஃபான் என்று அன்னார் கேட்டார்கள். கடந்த மாதமா? அல்லது நாம் கடந்து கொண்டிருக்கின்ற இந்த மாதமா? அல்லது இனி வர இருக்கின்ற ஷுஃபான் மாதமா? என்று கேட்டார்கள். மக்கள் அனைவரும் அறிந்து கொள்வதற்காக ஏதாவது தெளிவான தேதியை எழுதுங்கள் என்றும் அன்னார் கூறினார்கள்.

இப்னு ஸீரீன் கூறுகின்றார்கள். ஒரு நபர் யமனிலிருந்து வந்தார். அவர் கூறினார். நான் யமன் நாட்டில் ஒன்றை பார்த்தேன். அதனை அவர்கள் வரலாறு என்று கூறுகின்றனர். அவர் அதனை இவ்வாறு கூறுகின்றார். இன்ன வருடம் மற்றும் இன்ன மாதம் என்று குறிப்பிட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இது மிகவும் நல்ல வழிமுறை. நீங்களும் வரலாற்றை எழுதுங்கள் என்று கூறினார்கள்.

ஹிஜ்ரி நாட்காட்டி உருவானது. இந்த காலண்டரை யார் துவக்கி வைத்தார்? இது குறித்து பல்வேறு கருத்துக்கள் உள்ளன. முதலாவது கூற்றின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரலாற்றை ஒழுங்குபடுத்துவதற்கான வழிகாட்டல்கள் வழங்கினார்கள். ரபீவுல் அவ்வல் மாதத்தில் வரலாறு எழுதப்பட்டது. எனவே ஹாகிம் என்பவர் தனது நூலான اَلۡاِکۡلِیۡل என்பதில் இப்னு ஷஹாப் சுஹ்ரி அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்.

اَنَّ النَّبِیَّ لَمَّا قَدِمَ الۡمَدِیۡنَۃَ اَمَرَ

بِالتَّارِیۡخِ فَکُتِبَ فِیۡ رَبِیۡعِ الۡاَوَّلِ

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்தபோது அன்னார் வரலாற்றை எழுதும்படி கட்டளையிட்டார்கள். எனவே அது ரபீவுல் அவ்வலில் எழுதப்பட்டது.

அல்லாமா இப்னு ஹிஜ்ர் அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த அறிவிப்பு முஃறலல் ஆகும். முஃறலல் என்பதன் பொருள் என்னவென்றால், எந்த அறிவிப்பின் சான்றில் மேலே செல்லச்செல்ல அதிக அறிவிப்பாளர்கள் மௌனத்தை மேற்கொண்டார்களோ அந்த அறிவிப்புகள் முஃறலல் என்று அறிவிக்கப்படும்.

மற்றொரு அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்த நாள் முதல் வரலாறு எழுதப்பட்டது. ஆனால் பிரபலமான கூற்றுகள் இதற்கு நேர் எதிரானதாகும். அது என்னவென்றால், ஹிஜ்ரி நாட்காட்டி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் நிலைபெற்றதாகும்.

سُبُلُ الۡھُدٰی وَ الرَّشَادِ فِیۡ سِیۡرَۃِ خَیۡرِ الۡعِبَاد

என்ற நூலின் ஆசிரியர் முஹம்மது பின் யூசுஃப் ஸாலிஹி அவர்கள் கூறுகின்றார்கள்: இப்னு ஸலாஹ் கூறினார். அபூ தாஹிர் மஹ்மிஷ் நூலான அஷ்ஷுரூத் என்பதில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரலாறை எழுதுவதற்கு கட்டளையிட்டிருந்தார்கள். ஏனென்றால் அன்னார் நஜ்ரான் நாட்டு கிறிஸ்துவர்களுக்கு கடிதம் எழுத கட்டளையிட்டபோது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் لِخَمۡسٍ مِّنَ الۡھِجۡرَۃِ என்று எழுதும்படி கூறினார்கள். அதாவது

ஹிஜ்ரத்திற்குப் பிறகு ஐந்தாம் ஆண்டு என்பது பொருளாகும்.

எனவே இந்தஅடிப்படையில் முதலாவது வரலாற்று ஆசிரியர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆவார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றியுள்ளார்கள்.

மற்றொரு அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் யஃலா பின் உமைய்யா (ரலி) அவர்கள் யமன் நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அன்னார் வரலாற்றை துவக்கினார்கள். இமாம் அஹ்மத் அவர்கள் அதனை எடுத்துரைத்துள்ளார்கள். ஆனால் இதில் தடை உள்ளது. அதாவது அம்ர் மற்றும் யஃலா அவர்களுக்கிடையில் முரண்பாடு உள்ளது.

மூன்றாவது மற்றும் பிரபலமான கூற்றிற்கேற்ப இவ்வாறு வருகின்றது. அதாவது ஹிஜ்ரத் நாட்காட்டி ஹிஜ்ரத்தின் துவக்கத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் உருவானது.

ஹிஜ்ரி காலண்டர் ஹிஜ்ரத்திலிருந்து ஏன் ஆரம்பிக்கப்பட்டது? இது தொடர்பாக இவ்வாறு விளக்கம் கிடைக்கின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆண்டை குறிப்பிடுவது தொடர்பாக ஆலோசனை கேட்டபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறப்பிலிருந்து அது துவங்கப்பட வேண்டும் என ஓர் ஆலோசனை தரப்பட்டது. மற்றொரு ஆலோசனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றிய ஆண்டிலிருந்து (நபித்துவ வாதத்திலிருந்து) அது தொடங்கப்பட வேண்டும் என்று வழங்கப்பட்டது. அன்னார் மரணமடைந்த ஆண்டிலிருந்து அது துவங்கப்பட வேண்டும் என்பது மூன்றாவது கருத்தாக இருந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்த ஆண்டிலிருந்து துவங்கப்பட வேண்டும் என்பது நான்காவது கருத்தாக இருந்தது. ஹிஜ்ரத்தின் ஆண்டிலிருந்து அதனை துவங்குவது உகந்ததாக கருதப்பட்டது. ஏனென்றால் பிறப்பு மற்றும் தோற்றத்தின் ஆண்டை குறிப்பிடுவதில் கருத்து வேறுபாடு இருந்தது. மரணமடைந்த ஆண்டைப் பொருத்தவரை அது தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தின் காரணமாக முஸ்லிம்களின் துன்பமும் வேதனையும் அதில் கலந்திருந்தது. எனவே சஹாபிகள் ஹிஜ்ரத் ஆண்டிலிருந்து துவக்குவதில் உடன்பட்டார்கள்.

சஹாபிகள் ரபீவுல் அவ்வல் மாதத்திற்குப் பகரமாக முஹர்ரம் மாதத்திலிருந்து புதிய ஆண்டை ஏன் துவக்கினார்கள்? அதற்கு காரணம் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஹர்ரம் மாதத்திலேயே ஹிஜ்ரத் செய்வதற்கு உறுதிபூண்டு விட்டார்கள். துல் ஹஜ்ஜா மாதத்தில் பைஅத்தே உக்பா, சானியா நடந்திருந்தது. மேலும் அதுவே ஹிஜ்ரத்திற்கான முன்னெடுப்பாக இருந்தது. இதேபோன்று பைஅத்தே உக்பா, சானியா மற்றும் ஹிஜ்ரத்திற்கான உறுதியான எண்ணம் கொண்ட பிறகு உதித்த பிறை முஹர்ரமின் பிறையாக இருந்தது. எனவே இதன் காரணமாகவும் இந்த அடிப்படையில் ஆண்டை துவக்குவது என்பது உகந்ததாக கருதப்பட்டது.

அல்லாமா இப்னு ஹிஜ்ர் கூறுகின்றார்கள்: இஸ்லாமிய காலண்டர் முஹர்ரம் மாதத்திலிருந்து துவங்குவதற்கு என்னைப் பொறுத்தவரை இதுவே மிகவும் வலிமையான ஆதாரமாகும்.

(ஃபத்ஹுல் பாரி லி இப்னு ஹிஜ்ர் தொகுதி 7 பக்கம் 314,31 கிதாப் மனாகிப் வல்அன்ஸார் ஹதீஸ் எண் 3934 – 1986 ஆம் ஆண்டு காஹிராவில் அச்சிடப்பட்டது & சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 12 பக்கம் 36,37 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு எப்போது வருகை தந்தார்கள்? இது குறித்து பல்வேறு கருத்துகள் உள்ளன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல்வேறு இடங்களில் தங்கியவாறு ரபீவுல் அவ்வல் மாதம் 14 ஆம் தேதி நபித்துவ ஆண்டிற்கேற்பவும், 20 செப்டம்பர் 622 ஆண்டிலும் மதீனாவிற்கு வந்தடைந்தார்கள். சில வரலாற்று ஆய்வாளர்களைப் பொறுத்தவரை அது ரபீவுல் அவ்வல் 8 ஆம் தேதியாக இருந்தது. சிலரைப் பொறுத்தவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஃபர் மாதத்தில் புறப்பட்டார்கள். ரபீவுல் அவ்வலில் வந்தடைந்தார்கள். ரபீவுல் அவ்வல் 1 ஆம் தேதியில் மக்காவிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்தை துவக்கினார்கள். மேலும் ரபீவுல் அவ்வல் 12 ஆம் தேதி மதீனா வந்தடைந்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாயிப் MA அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 243 & ஷரஹ் அஸ்ஸர்கானி அலல் மவாஹிப் லித்துன்யா தொகுதி 2 பக்கம் 102 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹிஜ்ரி நாட்காட்டி எந்த ஆண்டு உருவானது? இது குறித்து பல்வேறு கருத்துக்கள் உள்ளன. இந்த காலண்டர் எப்போது துவங்கியது? என்பது பற்றி சிலர் ஹிஜ்ரி 16 வது ஆண்டு துவங்கியதாக கூறுகின்றனர். சிலர் ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டு என்று கூறுகின்றனர். வேறு சிலர் ஹிஜ்ரி 18 ஆம் ஆண்டு என்று கூறுகின்றனர். சிலர் ஹிஜ்ரி 21 ஆம் ஆண்டு என்று கூறுகின்றனர்.

(அல்காமில் ஃபித்தாரீக் லி இப்னி அஸீர் தொகுதி 1 பக்கம் 13 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் அரபிய்யில் அச்சிடப்பட்டது & ஷுப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 248 – 2004 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் இந்தக் காலண்டர் துவங்கப்பட்டது என்பதில் பெரும்பாலானவர்கள் உடன்பட்டுள்ளார்கள்.

இஸ்லாமிய நாணயம்: பொதுவான வரலாற்று ஆய்வாளர்களைப் பொறுத்தவரை அரபு நாட்டில் முதல் முதலில் அப்துல் மலிக் பின் மர்வான் என்பவரே நாணயத்தை வெளியிட்டதாக கருதுகின்றனர். மதீனா தய்யிபாவின் சில ஆய்வாளர்கள் இவ்வாறு கூறுகின்றனர். அதாவது முதன் முதலில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் தான் இஸ்லாமிய நாணயம் நடைமுறைக்கு வந்தது. அதில் 'الحمدلله' என்று பதிக்கப்பட்டிருந்தது. சிலவற்றில் 'محمد رسول الله' என்றும் மேலும் சிலவற்றில் 'لا اله الا الله وحده' என்றும் பதியப்பட்டிருந்தது. ஆனால் ஈரானிய அரசர்களின் புகைப்படங்கள் எல்லாம் அதில் இருந்திருக்கவில்லை.

ஓர் ஆய்வின் அடிப்படையில் முதன் முதலில் இஸ்லாமிய நாணயம் டமாஸ்கஸில் ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் அதற்கு மேலே அரசர்களின் புகைப்படம் லத்தீனி மொழியில் எழுதப்பட்ட வாசகங்களும் இருந்ததாக சிலர் கூறுகின்றனர். மற்றொரு அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹிஜ்ரி 18 ஆம் ஆண்டில் முதன் முதலில் இஸ்லாமிய நாணயம் பயன்பாட்டிற்கு வந்தது. அப்போதைய தேவைக்கேற்ப சாஸான் பகுதிகளில் நடைமுறையில் இருந்த நாணயங்களே பயன்படுத்தப்பட்டன. அதில் சாஸானி அரசர்களின் படங்களும் இடம் பெற்றிருந்தன. ஆனால் அதில் பிஸ்மில்லாஹ் என்றும் எழுதப்பட்டிருந்தது.

(ஷுப்லி நுஃமானி அவர்கள் எழுதிய

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 250 – 2004 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்னென்ன விஷயங்களை துவங்கினார்கள்? எவையெல்லாம் அவ்வலியாத்தாக இருக்கின்றன? மேலும் எவை அவ்வலிய்யாத்தே ஃபாரூக்கி என்று அழைக்கப்படுகின்றன? அல்லாமா ஷிப்லி நுஃமானி அல்ஃபாரூக் என்ற தமது புத்தகத்தில் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒவ்வொரு வழிமுறையிலும் புதுப்புது விஷயங்களை கண்டுபிடித்தார்கள். அதனை வரலாற்று ஆய்வாளர்கள் ஒன்றுகூட்டி எழுதியுள்ளார்கள். அவை அவ்வலியாத் என்று கூறப்படும். அது கீழ்க்கண்டவை ஆகும்: அதாவது அன்னார் இன்ன இன்ன விஷயங்களை துவங்கினார்கள் என்பதாகும்.

(1) பைத்துல் மால் அதாவது கருவூலத்தை நிறுவினார்கள்.

(2) நீதிமன்றங்களை நிறுவினார்கள்.

(3) நீதிபதிகளை நியமித்தார்கள். பின்னர் வரலாறு மற்றும் காலண்டரை நிறுவினார்கள். அது இன்று வரை தொடர்கின்றது.

(4) அமீருல் மூமினீன் என்ற பட்டத்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் காலத்தின் கலீஃபாவிற்காக பயன்படுத்தினார்கள்.

(5) இராணுவ அலுவலகங்களை முறைப்படுத்தினார்கள்.

(6) தன்னார்வலர்களின் ஊதியத்தை நிர்ணயம் செய்தார்கள்.

(7) (பைத்துல்) மால் அலுவலகத்தை நிறுவினார்கள்.

(8)அளவீடுகளை நடைமுறைப்படுத்தினார்கள்.

(9) புதிதாக மக்கள் தொகைகணக்கெடுப்பு நடத்தினார்கள்.

(10) கால்வாய்களை வெட்டினார்கள்.

(11) புதிய நகரங்களை குடிமயர்த்தினார்கள். அதாவது கூஃபா, பஸரா, ஜீஸா, ஃபுஸ்தாத், மோசல் போன்ற நகரங்களை உருவாக்கினார்கள்.

(12) நாடுகளை மாநிலங்களில் பிரித்தார்கள்.

(13) உஷூர் அதாவது பத்தில் ஒரு பங்கை வரியாக நிர்ணயம் செய்தார்கள். உஷூர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கண்டுபிடிப்பாகும். அது இவ்வாறு துவங்கப்பட்டது. முஸ்லிம்கள் அன்னிய நாடுகளுக்கு வியாபாரத்திற்காக சென்று வந்தனர். அவர்களிடமிருந்து அங்குள்ள சட்டத்திற்கேற்ப வியாபார செல்வங்களிலிருந்து பத்து சதவிகிதம் வரியாக பெறப்பட்டது.

அபூ மூஸா அஷ்அரி அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இந்த சம்பவத்தைக் குறித்து தகவல் கொடுத்தார்கள். இந்த நாடுகளின் வியாபாரிகள் அதாவது எங்களுடைய நாட்டிற்கு வருகை தருகின்ற இன்ன நாடுகளின் வியாபாரிகளிடமிருந்து இந்த அளவிற்கு வரி வசூல் செய்யப்பட வேண்டும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கட்டளையிட்டார்கள். அதாவது அவர்களிடமிருந்து 10 சதவிகிதம் வரி வசூல் செய்யப்பட வேண்டும் என்று கூறினார்கள்.

(14) கால்வாய்களை வெட்டி அதில் மஃசூல் செய்யப்பட்டது.

(15) ஆயுத வியாபாரிகள் நாட்டில் வருவதற்கும், வியாபாரம் செய்வதற்கும் அனுமதி வழங்கினார்கள்.

(16) சிறைச் சாலைகளை உருவாக்கினார்கள்.

(17) துர்ரே என்பதை பயன்படுத்தினார்கள்.

(18) இரவில் ரோந்துக்குச் சென்று பொது மக்களின் நிலைகளை விசாரிக்கின்ற வழிமுறையை வெளிப்படுத்தினார்கள்.

(19) காவல்துறையை ஏற்படுத்தினார்கள்.

(20) பல இடங்களில் இராணுவ தளங்களை நிறுவினார்கள்.

(21) அதுவரை அரபுகளிடத்தில் நடைமுறையில் இல்லாத ஒன்றை நடைமுறைப்படுத்தினார்கள். அதாவது குதிரைகளின் இனங்களில் அஸீல் மற்றும் முஜன்னஸ் இரண்டிற்கும் இடையில் வித்தியாசத்தை ஏற்படுத்தினார்கள்.

(22) கேள்வித் தாள்களை நியமனம் செய்தார்கள்.

(23) மக்காவிலிருந்து மதீனா வரை செல்கின்ற பயணிகளின் ஓய்விற்காக தங்கும் விடுதிகளை கட்டினார்கள்.

(24) அனாதை பிள்ளைகளை பராமரிப்பதற்காக அனாதை இல்லங்களை நிறுவினார்கள்.

(25) பல்வேறு நகரங்களில் விருந்தினர் இல்லங்களை கட்டினார்கள்.

(26) அரபிகள் நிராகரிப்பாளர்களாக இருந்தாலும் அவர்களை அடிமையாக ஆக்க முடியாது என்ற முறையான சட்டத்தை உருவாக்கினார்கள்.

(27) இயலாத கிறிஸ்துவர்களுக்கும், யூதர்களுக்கும் உதவித் தொகையை நிர்ணயம் செய்தார்கள்.

(28) நூலகங்களை நிறுவினார்கள்.

(29) ஆசியர்கள் மற்றும் மதரஸாக்களை நிறுவி ஊதியங்களை நிர்ணயம் செய்தார்கள்.

(30) ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை திருக்குர்ஆனின் வரிசைக் கிரமத்திற்கேற்ப அதை ஒழுங்குபடுத்த ஆயத்தப்படுத்தினார்கள்.

(31) கியாஸிற்கான விதிமுறையை வகுத்தார்கள்.

(32) கடமைகளில் அவ்ல் என்ற விவகாரத்தை கண்டுபிடித்தார்கள். அதாவது உணவு, உடைக்காக சிலரை குடும்பத்துடன் இணைப்பதாகும்.

(33) தராவீஹ் தொழுகையை ஜமாஅத்துடன் தொழுவதை நடைமுறைப்படுத்தினார்கள்.

(34) ஒரே நேரத்தில் ஒன்றாக கூறப்படும் மூன்று தலாக்குகளை தலாக்கே பாயின் என்று அமல்படுத்தினார்கள். இதனை அன்னார் தண்டனை என்ற ரீதியில் நடைமுறைப்படுத்தினார்கள்.

(35) மதுவிலக்கு என்ற கட்டளைக்கு மாற்றம் செய்தால் 80 சவுக்கடி நிர்ணயிக்கப்பட்டது.

(36) வியாபார குதிரைகளுக்கு ஸகாத்து உண்டு என்பதை நிர்ணயம் செய்தார்கள்.

(37) பனு சஃலபின் கிறிஸ்துவர்கள் மீது ஜஸ்யாவிற்குப் பகரமாக ஸக்காத்தை நிர்ணயம் செய்தார்கள்.

(38) வக்ஃப் செய்வதற்குரிய வழிமுறையை கண்டுபிடித்தார்கள்.

(39) ஜனாஸா தொழுகையில் நான்கு தக்பீர்களில் அனைத்து மக்களும் ஒன்றுபட்டு இருந்தார்கள். பொதுவாக மேலோட்டமாக மூன்று தக்பீர்கள் கூறப்பட்டு வந்தன. அல்லது நான்காவது தக்பீருடன் கடைசி தக்பீர் ஸலாம் கொடுப்பதற்கு முன்பு நான்கு தக்பீர்கள் இடம் பெற்றிருந்தன. இப்போதும் கூட இதே வழிமுறை தான் நடைமுறையில் உள்ளது.

(40) பள்ளிவாசல்களில் அறிவுரை செய்வதற்கான வழிமுறை நிர்ணயிக்கப்பட்டது. அன்னாரின் அனுமதியுடன் அறிவுரையாளர் அறிவுரை செய்வார்.

(41) இமாம்கள் மற்றும் பாங்கு கொடுப்பவர்களின் ஊதியங்களும் நிர்ணயிக்கப்பட்டன.

(42) பள்ளிவாசல்களில் இரவில் ஒளியூட்டுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

(43) ஹுஜூ செய்தால் (அவதூறு பரப்பினால்) கடுமையான தண்டனை கொடுக்கப்பட்டது.

(44) கஸலியா கவிதைகளில் பெண்களின் பெயர் நினைவு கூறப்படுவதை தடை செய்தார்கள். ஆனால் இந்த வழிமுறை அரபிகளிடம் ஒரு நீண்ட காலமாக நடைமுறையில் இருந்தது.

அல்லாமா ஷிப்லி அவர்கள் கூறுகின்றார்கள்: இது மட்டுமின்றி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அவ்வலியாத்துகள் இன்னும் உள்ளன. நாம் அதனை கட்டுரை நீண்ட விடும் என்ற அச்சத்தால் இங்கு எழுதவில்லை.

(ஷூப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 212, 401–403

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

– 1991 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் இந்த நற்குறிப்பும் இன்னும் தொடர்கிறது. எதிர்காலத்திலும் இன்ஷா அல்லாஹ் எடுத்துரைப்பேன். தற்போது நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்பையும் செய்ய விரும்புகின்றேன். தொழுகைக்குப்பிறகு ஜனாஸா தொழுகையையும் தொழ வைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

முதலாவது நற்குறிப்பு இந்தோனேஷியாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய Suripto Hadi Siswoyo சாஹிப் அவர்களுடையதாகும். கடந்த மாதம் 88 வது வயதில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அன்னார் 21 வயது வயதில் பைஅத் செய்திருந்தார்கள். அந்த நேரத்தில் மிகவும் உறுதியுடன் நிலைநின்றார்கள். மனைவி மட்டுமின்றி 8 பிள்ளைகளை தனது நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள் என்று மர்ஹூமின் மனைவி எழுதியுள்ளார். ஒரு மகன் முபல்லிக்காக தொண்டாற்றி வருகின்றார். மர்ஹூம் பல முறை ஜமாஅத்தின் தலைவர் என்ற முறையில் தொண்டாற்றி வந்துள்ளார்கள். இந்தோனேஷியாவின் தாருல் கஸாவில் நீதிபதியாகவும் தொண்டாற்றும் நற்பாக்கியம் பெற்றுள்ளார்கள். தப்லீக்கில் மிகுந்த ஆர்வம் இருந்தது. சுறுசுறுப்பான இறைவன் பால் மக்களை அழைக்கும் ஒரு நபராக அன்னார் திகழ்ந்தார்கள். எந்தவொரு கடினமான சூழ்நிலையிலும் தப்லீக் செய்கின்ற உணர்வு அன்னாருக்கு ஒருபோதும் முடிந்து விடவில்லை.

அன்னாரின் மகன் உர்வான் ஹபீபுல்லாஹ் சாஹிப் முரப்பியாக இருக்கின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: பல முறை இவ்வாறு நிகழ்ந்துள்ளது. அதாவது மோட்டார் சைக்கிளை ஒருவருடைய வீட்டில் விட்டு விட்டு தப்லீக் செய்வதற்காக பல கிலோ மீட்டர் வரை நடந்தே பயணம் செய்து வந்தார்கள். ஒரு கிராமத்திற்கு செல்வதற்கு நதிகளையும், பாறைகளையும் கடக்க நேரிட்டால் அன்னார் அவ்வாறு செய்வார்கள். பயணம் மிகவும் கடினமாக இருந்து வந்தது. தந்தை மிகவும் உழைக்கக்கூடியவராகவும், பணி செய்யக்கூடிய நபராகவும் இருந்தார்கள். ஆசிரியராக எனது தந்தை பணியாற்றி வந்தார்கள்.

எனவே அன்னார் தனது பள்ளிக்கூடத்தின் முதல்வரிடம் இவ்வாறு விண்ணப்பம் செய்தார்கள். அதாவது தான் பாடம் நடத்துகின்ற வகுப்புகளின் நாட்களை நான்காக ஆக்கிக் கொள்ளும்படி விண்ணப்பித்தார்கள். பள்ளிக்கூடத்தின் எத்தனை வகுப்புகள் இருந்தனவோ அதனை நான்கு நாட்களில் முழுமை செய்வதற்கும் ஏனைய நாட்களில் தப்லீக் செய்வதற்காக அதிக நேரம் கிடைக்கும் பொருட்டு விடுமுறை அளிக்கும்படியும் விண்ணப்பித்திருந்தார்கள்.வியாழக்கிழமையன்று பள்ளிக்கூடத்திலிருந்து வந்து நேராக தப்லீக்கிற்கு சென்று விடுவார்கள். ஞாயிற்றுக்கிழமை மாலை தான் வீட்டிற்கு திரும்பி வருவார்கள். சில முறை திங்கட்கிழமை தான் வீட்டிற்கு வருவார்கள்.

பஷாரத் அஹ்மத் முரப்பி சாஹிப் எழுதுகின்றார்கள்: மத்திய ஜாவாவின் Wonosobo பகுதியில் அன்னாரின் மூலமாக பத்து ஜமாஅத்துகள் உருவாகி உள்ளன. எல்லா நிலையிலும் தஹஜ்ஜுத் தொழுகைக்கு சிறப்பான ஏற்பாடு செய்து வந்தார்கள். எல்லா தரப்பு மக்களுடனும் மிகுந்த மரியாதையுடனும், மென்மையுடனும் நடந்து வந்தார்கள். இறுதி மூச்சு வரை நான் தப்லீக்கில் மும்முரமாக இருக்க வேண்டும் என்பது எனது ஆசையாகும் என்று ஒரு முறை அன்னார் கூறினார்கள். இதில் தான் எனது மகிழ்ச்சியும் எனது ஆரோக்கியத்தின் திறவுகோலும் உள்ளது என்றும் கூறினார்கள்.

அஹ்மத் ஹிதாயத் முரப்பி சாஹிப் எழுதுகின்றார்கள்: மர்ஹூம் இறைவன்பால் மக்களை அழைக்கும் ஒரு வீரமான நபராக இருந்தார்கள். எதிரிகளிடமிருந்து மிரட்டல்கள் வரும்போது ஒருபோதும் அவர்கள் அச்சத்தை உணர்ந்ததில்லை. மிகவும் தைரியத்துடன் எதிர்கொண்டு வந்தார்கள்.

அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக.

அடுத்த நற்குறிப்பு நன்கானா மாவட்டத்தைச் சேர்ந்த இப்னுல்லாஹ் தாத் சாஹிப் அவர்களின் மகனான சவுத்ரி பஷீர் அஹ்மத் பட்டி சாஹிப் அவர்களுடையதாகும். 95 வது வயதில் கடந்த மாதம் அன்னாரின் மரணம் நிகழ்ந்துள்ளது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அன்னாரின் மகன் முஹம்மது அஃப்ஸல் சாஹின் தன்ஸானிய்யாவில் முரப்பியாக இருக்கின்றார். அன்னார் கூறுகின்றார்கள்: மர்ஹூம் பிறப்பால் அஹ்மதி ஆவார்கள். நோன்பு மற்றும் தொழுகையை பேணி வந்தார்கள். நீதியை விரும்புபவராகவும் தெளிவாக பேசுபவராகவும் இருந்தார்கள். அஹ்மதிய்யத் மற்றும் கிலாஃபத்துடன் உளப்பூர்வமான அன்பு இருந்தது. சிறு வயது முதலே காதியான் ஜல்ஸாவிற்கு சென்று வந்தார்கள். கிராமத்தில் தஃவீஸ் கட்டக்கூடியவர்களைப் பார்த்து மக்கள் அஞ்சி வந்தனர். நமது நாட்டில் இது பொதுவான நடைமுறையாகும். ஆனால் மர்ஹூம் இந்த மக்களைக் கண்டு அஞ்ச வேண்டாம் என்று கிராமவாசிகளிடம் கூறி வந்தார்கள். இந்த நபர்கள் அல்லாஹ்வின் விருப்பமின்றி உங்களுக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது என்றும் கூறினார்கள். ஆனால் தாங்களோ அஹ்மதியாக இருக்கின்றீர்கள். நீங்கள் இந்த விஷயத்தை நம்புவதில்லை. எனவே உங்களுக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது. ஆனால் எங்களுக்கு மிகவும் பயமாக உள்ளது என்று கிராமவாசிகள் அன்னாருக்கு பதிலளித்து வந்தார்கள்.

1953 ஆம் ஆண்டில் குழப்பங்கள் துவங்கியபோது அஹ்மதிய்யத்தின் எதிரிகள் அந்தப் பகுதியில் ஊர்வலம் நடத்தினார்கள். அஹ்மதிகளின் வீடுகளில் தீ மூட்டுவதற்கு திட்டம் தீட்டினார்கள். அருகிலிருந்த கிராமத்திலிருந்து அன்னாரின் சகோதரரான ஒருவர் கிராமத்தில் பெரும் செல்வாக்கு பெற்றிருந்தார். ஆனால் அவர் அஹ்மதியாக இருக்கவில்லை. சில மக்கள் அவரிடம் சென்றனர். அஹ்மதிகள் டேராவில் இருக்கின்றார்கள். நாளை நாம் அங்கு நெருப்பு மூட்டி விடுவோம் என்று அவர்கள் கூறினர். அவர்கள் அங்கிருந்து சென்று விடட்டும். அல்லது அஹ்மதிய்யத்தை நிராகரித்து விடட்டும். இல்லையென்றால் முடிவு நல்லதாக இருக்காது என்பதை அவர்களுக்கு புரிய வைக்கும்படி அவர்கள் கூறினர்.

எனவே அன்னாரின் உறவினர்கள் அவருக்கு புரிய வைத்தார்கள். தற்காலிகமாக அஹ்மதிய்யத்தை நிராகரித்து விடுங்கள். ஊர்வலம் கடந்து சென்றுவிடும்பொழுது பின்னர் மீண்டும் உங்களது மார்க்கத்திற்கு திரும்பி சென்று விடுங்கள் என்று மர்ஹூமிடம் கூறப்பட்டபோது மர்ஹூம் கூறினார்கள்: நீங்கள் கவலையடைய வேண்டாம். நாங்கள் மிகவும் சிந்தித்து, புரிந்து தான் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டுள்ளோம். எங்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. நாங்கள் அஹ்மதிய்யத்திற்காக குர்பான் ஆகிவிட முடியும். ஆனால் ஒரு நொடிப்பொழுது கூட எங்களது ஈமானிலிருந்து பின்வாங்க முடியாது.

எவ்வாறிருப்பினும் உங்களால் எதையும் செய்ய முடியவில்லை என்றால் செய்ய வேண்டாம். அல்லாஹ்வின் மீதே நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். ஆனால் அல்லாஹ் எப்படிப்பட்ட ஏற்பாட்டைச் செய்தான் என்றால் ஊர்வலம் ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு வந்த பிறகு மக்கள் சுயமே கலைந்து சென்று விட்டனர். அவர்களுக்கு இவர்களின் (அஹ்மதிகளின்) இடம் வரை வந்தடைவதற்கு தைரியம் ஏற்படவில்லை.

மர்ஹூம் இரண்டு மகள்களையும், ஐந்து மகன்களையும் விட்டுச் சென்றுள்ளார். ஒரு மகன் மதிப்பிற்குரிய அஃப்ஸல் பட்டி சாஹிப்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

தன்ஸானிய்யாவில் முரப்பியாக பணியாற்றுகின்றார். அங்கு தொண்டாற்றும் நற்பேறு பெற்று வருகின்றார். செயல் களத்தில் இருந்ததன் காரணமாக ஜனாஸா மற்றும் நல்லடக்கத்தில் அன்னாரால் கலந்து கொள்ள முடியவில்லை.

அல்லாஹ் மர்ஹூமின் அந்தஸ்தை உயர்த்துவானாக. மேலும் அன்னாரின் பிள்ளைகளுக்கும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக. ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியாத அன்னாரின் மகனுக்கும் பொறுமையையும், தைரியத்தையும் அல்லாஹ் வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு தாருன் நஸர் மேற்கு ரப்வாவைச் சேர்ந்த சவுத்ரி அல்லாஹ் ரக்கா முல்ஹி சாஹிப் அவர்களின் மகனாகிய ஹமீதுல்லாஹ் காதிம் முல்ஹி சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் 82 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான சவுத்ரி அல்லாஹ் பக்ஷ் புலர் சாஹிபின் மகன்வழிப் பேரனும், ஷஹீத் முரப்பியான நஸ்ருல்லாஹ் முல்ஹி சாஹிப் அவர்களின் தந்தையும் ஆவார்கள். மர்ஹூம் நோன்பு மற்றும் தொழுகையை பேணி வந்தார்கள். எளிமையான இயல்பை உடையவராகவும், கண்ணியமிகு இயல்பு கொண்டவராகவும், ஏழைகளை பராமரிப்பவராகவும், ஒரு கலப்பற்ற நன்றியுணர்வுமிக்க அஹ்மதியாகவும் இருந்தார்கள். பணி செய்த காலத்தில் மிகவும் தைரியத்துடன் எதிர்ப்பை எதிர்கொண்டு வந்தார்கள். அன்னாரின் ஒரு மகன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் ஆவார். ரப்வாவில் தாஹிர் ஹார்ட் மருத்துவமனையில் பணி செய்து வருகிறார். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த நற்குறிப்பு ஷரீஃபுல்லாஹ் கான் சாஹிப் அவர்களின் மகனான முஹம்மத் அலி கான் சாஹிப் அவர்களுடையதாகும். 89 வது வயதில் இறைநியதிக்கேற்ப அன்னார் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளால் 1/8 பகுதி வஸிய்யத் செய்திருந்தார்கள். தனக்குப் பிறகு 3 மகன்களையும், 7 மகன்களையும் தமது நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாரது ஒரு மகள் சலீமா சாஹிபா புர்கான் சாஹிப் அவர்களின் துணைவியார் ஆவார்கள். இஸ்லாமாபாதில் தான் வசித்து வருகின்றார்கள்.

அன்னார் எழுதுகின்றார்கள்: முதலில் இந்த மக்கள் (அவர்களின் குடும்பம்) பைஅத் செய்யாதவர்களாக (லாஹூரிகளாக) இருந்தனர். பின்னர் 1954 ஆம் ஆண்டில் அன்னாரின் தந்தையார் இரண்டாவது கலீஃபா (ரலி) அவர்களின் கையில் பைஅத் செய்தார். மேலும் இறுதி மூச்சு வரை ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் தொடர்புடையவராக இருந்து வந்தார். அன்னாரின் தந்தை மார்க்கப் பற்றையும், ஜமாஅத்துடன் ஆழமான தொடர்பையும் வெளிப்படுத்தியுள்ளார். எவ்வாறிருப்பினும் அதற்குப் பிறகு அன்னாருக்கு ஜமாஅத் தொண்டுகள் ஆற்றுகின்ற நற்பேறும் கிடைத்துள்ளது. குத்தாமுல் அஹ்மதிய்யாவின் மாவட்ட காயித் ஆகவும் இருந்துள்ளார்கள். வஸிய்யத் செயலராகவும், தஃலீமுல் குர்ஆன் செயலராகவும் இருந்துள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகத்தை ஆழமாக படித்து வந்துள்ளார்கள். திருக்குர்ஆனின் மீது அன்னாருக்கு எல்லையற்ற அன்பு இருந்து வந்தது. எப்போதும் திருக்குர்ஆன் திலாவத் செய்து வந்ததை நான் பார்த்துள்ளேன். திருக்குர்ஆனின் ஏராளமான பகுதிகளை அன்னார் மனனம் செய்திருந்தார்கள். துஆ செய்பவராகவும், நல்லவராகவும், விருந்து உபசரிப்பு செய்பவராகவும், உண்மையான மற்றும் எளிமையான நபராகவும் இருந்தார்கள். அதிகமாக தரூது ஓதி வந்தார்கள். மக்களுக்கு பொருளாதார உதவியும் செய்து வந்தார்கள்.

நீங்கள் அஹ்மதிய்யத்தை விட்டு விட்டால் பின்னர் நாங்கள் உங்களது காலடியில் சரணடைவதற்கு தயாராக இருக்கின்றோம் என்று அன்னாரின் அஹ்மதி அல்லாத உறவினர்கள் கூறினர். எனது தந்தை அவர்களுக்கு இவ்வாறு பதிலளித்தார்கள்: எனக்கு உங்களின் குர்பானிக்கு என்ன அவசியம் உள்ளது? நான் சுயமே குர்பான் ஆகி விட்டேன். இப்போது எனது விஷயத்தை கேளுங்கள். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விஷயத்தை ஒப்புக் கொள்ளுங்கள். எவர் வர இருந்தாரோ அவர் வந்து விட்டார். உங்களது வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள். ஆனால் எவ்வாறிருப்பினும் அவர்கள் எந்த கவனமும் செலுத்தவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக அந்த அனைத்து உறவினர்களும் அன்னாரை விட்டு விலகி விட்டார்கள். ஆனால் அன்னார் அஹ்மதிய்யத்துடன் தொடர்பில் நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்து கொண்டே சென்றார்கள்.

அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்தை உயர்த்துவானாக.

அடுத்த நற்குறிப்பு அமெரிக்காவின் மேரி லேண்ட் பகுதியைச் சேர்ந்த சாஹிப்ஸாதா மஹ்தி லத்தீப் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் 87 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

சாஹிப்ஸாதா மஹ்தி லத்தீஃப் சாஹிப் அவர்கள் மதிப்பிற்குரிய சாஹிப்ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் (ரலி) அவர்களின் மகன்வழி பேரன் ஆவார்கள். மேலும் சாஹிப்ஸாதா முஹம்மது தய்யுப் லத்தீஃப் சாஹிப் மர்ஹூம் அவர்களின் மகன் ஆவார்கள்.

சாஹிப்ஸாதா மஹ்தி லத்தீஃப் சாஹிப் மர்ஹூம் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகங்களை மிகவும் ஆழமாக படித்திருந்தார்கள். ஐவேளை தொழுகைகளையும், தஹஜ்ஜுத் தொழுகைகளையும் முறையாக நிறைவேற்றி வந்தார்கள். கிலாஃபத் மற்றும் அஹ்மதிய்யத்தின் மீது அர்ப்பணிப்பு உணர்வு கொண்டவராக இருந்தார்கள். மிகவும் பணிவானவராகவும், எளிமையான பண்புகளுக்கு சொந்தக்காரராகவும் இருந்தார்கள்.

அன்னாருக்கு தப்லீக் செய்வதில் மிகுந்த ஆர்வம் இருந்தது. மற்றவர்களுக்கும் தப்லீக் செய்யும்படி அறிவுறுத்தி வந்தார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக.

அடுத்த நற்குறிப்பு ஷஹ்ஸாத் அக்பர் சாஹிப் அவர்களின் மகனாகிய ஃபைஸான் அஹ்மது சமீர் சாஹிப் அவர்களுடையதாகும். ஷஹ்ஸாத் அக்பர் சாஹிப் அவர்கள் நமது தனிச்செயலர் அலுவலகத்தின் ஊழியர் ஆவார்கள். மர்ஹூம் அன்னாரின் மகனாக இருந்தார்கள். கோவிட் காரணமாக 16 வது வயதில் அன்னாரின் மரணம் நிகழ்ந்துள்ளது. اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

மிகவும் புத்திசாலியாக இருந்தார்கள். குறைவாக பேசக்கூடியவராகவும், கண்ணியமான குணம் படைத்தவராகவும், நல்ல பிள்ளையாகவும் இருந்தார்கள். வக்ஃபே நவ் திட்டத்தில் சேர்ந்திருந்தார். தனது படிப்பின் பக்கம் கவனம் செலுத்தக்கூடியவராகவும் தேவையற்ற பணிகளில் இருந்து விலகி இருப்பவராகவும், இன்னும் கூறப்போனால் விளையாட்டிலும் கூட மிக குறைவாகவே பங்கு பெற்று வந்தார். முற்றிலும் கண்ணியமான இயல்பு கொண்ட பிள்ளையாக இருந்தார். பள்ளிக்கூடம் மட்டுமின்றி ஏனைய நேரத்தை அதிகமாக வீட்டிலேயே கழித்து வந்தார். அன்னாரின் தாய்வழி பாட்டனாராகிய காஜா அப்துஷ் ஷுகூர் சாஹிப் அவர்களும் நீண்ட காலமாக ஜமாஅத்திற்கு தொண்டாற்றி வருகின்றார்கள். அல்லாஹ் மர்ஹூமின் பெற்றோருக்கும் பொறுமையை வழங்குவானாக. பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக.

(தமிழில்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

☆☆☆

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 12 Aug 2021 Issue No. 32

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(மல்ஃபூஸாத்... முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

நாள் இறைவனிடமிருந்தே விலகிச் சென்று விடுகின்றார்கள்.

இவ்வாறு முழுமையான அர்ப்பணிப்பின் நிலையில் இருப்பவர் இறைவனின் சன்னிதானத்தில் வீழ்ந்து கிடக்கின்றார். ரூபூபிய்யத்தின் மடியில் அவர் பராமரிக்கப்படுகின்றார். இறைவனின் கருணையானது அவரை மூடி விடுகின்றது. எந்த அளவுக்கென்றால் அவர் பேசுவது இறைவன் பேசுவதைப் போன்று அமைகின்றது. அவரது நண்பர் இறைவனின் நண்பனாகவும், அவரது எதிரி இறைவனின் எதிரியாகவும் ஆகி விடுகின்றார். எனவே இறைவனின் எதிரியாக இருந்து கொண்டு ஒரு நபர் முழுமையான நம்பிக்கையாளராக எப்படி இருக்க முடியும்? இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவர்களையும், இறை நேசர்களையும் எதிர்ப்பதும் அவர்களுக்கு துன்பம் கொடுப்பதும் ஒருபோதும் நல்ல கனிகளை தர முடியாது. நான் அவரை துன்பப்படுத்தி தொல்லைகள் கொடுத்து நிம்மதியை பெற்று விடுவேன் என்று எவர் கருதுகிறாரோ அவர் பெரும் தவறிழைக்கின்றார். மேலும் அவரது நஃப்ஸ் அவரை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 314 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## நபிமொழி

**நல்வழியில் செலவு செய்வது மற்றும் பிறருக்கு கல்வி கற்றுக் கொடுப்பதன் சிறப்பு**

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம்( (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பொறாமை கொள்ளக்கூடாது. ஆயினும் இரண்டு (நபர்களைத்) தவிர. அல்லாஹ் வழங்கிய செல்வத்தை நல்ல வழியில் செலவு செய்யும் ஒருவர்; மற்றொருவர் அல்லாஹ் வழங்கிய ஞானத்திற்கேற்ப தானும் அமல் செய்து மக்களுக்கும் கற்றுக் கொடுப்பவராக இருப்பவர்.

(சஹீஹ் புகாரி, ஸகாத்தின் சட்டங்கள், அத்தியாயம் 24, ஹதீஸ் எண் 1409)

**ஸதகா மற்றும் ஸகாத் தூய்மையான செல்வங்களிலிருந்து கொடுப்பது**

ஹஸ்ரத் நபிகள் நாயகம்( (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் தூய்மையான சம்பாத்தியத்தில் ஒரு பேரீச்சம் பழத்தின் மதிப்புக்கு சமமாக தர்மம் செய்வாரோ (அல்லாஹ் பரிசுத்தமானவற்றைத் தவிர வேறெதையும் ஒப்புக் கொள்வதில்லை). அல்லாஹ் தன்னுடைய வலது கரத்தால் அந்த தருமத்தை ஒப்புக் கொள்கிறான். பின்னர் உங்களில் ஒருவர் தனது கன்றை வளர்ப்பது போன்று தர்மம் செய்ததற்காக அதனை (தருமத்தை) அதிகரித்து விடுகிறான். எந்தளவுக்கென்றால் அது (தருமம்) மலைக்கு சமமாக ஆகிவிடுகிறது.

(சஹீஹ் புகாரி, ஸகாத்தின் சட்டங்கள், அத்தியாயம் 24, ஹதீஸ் எண் 1410)

### நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்: 1800 103 2131**

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

*(தஃப்ஸீரே கபீர்... முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஓர் உயர்தரமான நம்பிக்கையாளர் இந்த சொல்லை பயன்படுத்துவார் என்றால் அதன் பொருள் இவ்வாறாக இருக்கும். அதாவது சிறப்புகளை பெறுவதிலிருந்து இழப்பிற்குரியவராக ஆக்குகின்ற பலவீனங்களிலிருந்து என்னை பாதுகாப்பாயாக. இடைப்பட்ட அந்தஸ்தைக் கொண்ட நம்பிக்கையாளருக்கு இந்த சொல் பயன்படுத்தப்படும்போது அதற்கு இவ்வாறு பொருள்படும். அதாவது எனது குறைகளை மறைத்து எனக்கு உயர்தரமான முன்னேற்றங்களுக்கு நற்பேறை வழங்குவாயாக. சாதாரண நம்பிக்கையாளர் இந்த சொல்லை பயன்படுத்தும்போது இவ்வாறு பொருள்படும். அதாவது எனது பாதங்களை ஈமானில் உறுதியுடன் நிலைபெறச் செய்வாயாக. எனது பாவங்கள் என்னை ஒருபோதும் வீணாக்கி விடக்கூடாது. உண்மையை தேடக்கூடியவர் இந்த சொல்லை பயன்படுத்துகின்றபோது அதன் பொருள் இவ்வாறாக இருக்கும். அதாவது எனது பாவங்கள் என்னை நேர்வழி பெறுவதிலிருந்து இழப்பிற்குரியவராக ஆக்கிவிடக்கூடாது. எனவே எனது பாவங்களை மன்னிப்பாயாக.

ஜப்பார் என்ற சொல் பல்வேறு இடங்களில் பயன்படுத்தப்படுவதைப் போன்றே இந்த சொல் பயன்படுகின்றது. அதாவது ஜப்பார் என்ற சொல் அல்லாஹ்விற்காக வரும்போது அதன் பொருள் முஸ்லிஹ் (சீர்திருத்தவாதி) என்பதாகும். இதே சொல் மனிதனுக்காக வருகின்றபோது அதன் பொருள் கட்டுப்படாமை மற்றும் சட்டத்தை மீறுதல் என்பதாகும்.

நினைவிற் கொள்ள வேண்டும். اَللّٰهُ يَجْتَبِيْ مِنْ رُّسُلِهٖ (அல்லாஹ் தனது தூதர்களிலிருந்து தான் நாடியவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். 3:180) என்று அல்லாஹ் தனது நபிமார்களைக் குறித்து கூறுகின்றான். எனவே அல்லாஹ் அவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கும்போது பின்னர் அவரிடம் பாவம் எவ்வாறு வர முடியும்? அவர்கள் உலகிலிருந்து விலகி இறைவனின் அருகில் அமர்ந்து விடும்பொழுது அவர்களிடம் ஷய்த்தான் எங்கிருந்து வருவான்? இறைவனின் பெயரை கேட்டவுடனேயே ஷய்த்தான் ஓடி விடுவான்.

இதேபோன்று மற்றொரு இடத்தில் اِنَّ عِبَادِيْ لَيْسَ لَكَ عَلَيْهِمْ سُلْطٰنٌ என்று அல்லாஹ் கூறுகின்றான். எனது அடியார்கள் மீது நிச்சயமாக உனது எந்த ஆதிக்கமும் இருக்காது. எனவே சட்டம் இதுவாக இருக்கின்றது. அதாவது சாதாரண உபூபிய்யத் என்ற அந்தஸ்தில் இருப்பவரைக்கூட அல்லாஹ் ஷய்த்தானின் ஆதிக்கத்திலிருந்து பாதுகாக்கின்றான். எனவே நபிமார்கள் அல்லாஹ்வின் சிறப்பான பாதுகாப்பின் கீழ் இருக்கின்றார்கள். ஷய்த்தான் எப்படி அவர்களுக்கு அருகில் நெருங்க முடியும்?

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 3 பக்கம் 489 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

......☆......☆......☆......

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

**O.A.N. DOORS & STEELS**



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad